வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.09.2023 புதன்கிழமை | இதழ் : 291 | பக்கங்கள் : 16

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று நல்லூரில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப். 27

தியாகி திலீபனின் 36வது நினைவு நிகழ்வு நேற்று தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுட்டிக்கப்பட்டது. நேற்று நல்லூரடியில் பெருந்திரளானவர்கள் ஒன்றுகூடி, திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

குறிப்பாக நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும் , நாட்டுப்பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகனால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த 11



# மொட்டுக் கட்சியில் ஒருவரே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

### கட்சி முக்கியஸ்தர்களிடம் பசில் உறுதி

கொழும்பு, செப். 27

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது மொட்டு கட்சி வேட்பாளர் ஒருவரை களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சி செயற்பாட்டாளர்களிடம் பசில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷ கட்சி தலைமையகத்தில் கடந்த வாரம் முதல் தொடர் சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

தொகுதி அமைப்பாளர்கள், முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் சந்திப்பில் பங்கேற்று வருகின்றனர்.

சமகால அரசியல் மற்றும் கட்சியின் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் கட்சி செயற்பாட்டாளர்களின் ஆலோசனைகளும், கருத்துகளும் 11

# இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு!

### உறுதியளித்துள்ளது உலக வங்கி

கொழும்பு, செப். 27

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பதற்கான இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெர்வோஸ்க்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் பல விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க 11

# இலங்கையில் இனப்படுகொலை முற்றிலும் பொய்க் குற்றச்சாட்டு!

## கனடாவின் கூற்றை மறுக்கிறார் அலி சப்ரி

கொழும்பு, செப் ரெம்பர்27

இலங்கையை போன்றே தற்போது எந்தவித ஆதாரமும் இன்றி சில குற்றச்சாட்டுக்களை இந்தியா மீதும் கனடா முன்வைப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பான விடயமாகும் எனவும் அவர் கூறினார். 11



# வெளியுறவு அமைச்சர் பதவி விலக வேண்டும்!

### மேர்வின் சில்வா வலியுறுத்து

கொழும்பு, செப். 27

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நாட்டு மக்களிடம் மன்னிப்புகோர வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, ஐ.நா. தொடருக்கு சென்றிருந்த இலங்கை குழாமும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியின் மகனும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். தனக்கு வேலை அதிகம், அதனால்தான் தன்னார்வ அடிப்படையில் மகனை இணைத்துக்கொண்டார் என்பது உட்பட பல கதைகளை தற்போது அலிசப்ரி 11

# நாணய நிதிய பிரதிநிதிகளை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, செப். 27

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் ஆரம்பமானதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. 11

# அமெ. காங்கிரஸின் உறுப்பினர்கள் இலங்கைக்கு எதிராக அணி திரள்வு

நியூயோர்க், செப். 27

சித்திரவதைகளுக்கு எதிரான உடன்படிக்கையின் கீழ் இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு அமெரிக்க காங்கிரஸின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் 12 உறுப்பினர்கள் அந்நாட்டு இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை இராணுவம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மூலம் தமிழ் மக்கள் எதிர்நோக்க 11

# கடனை மீளச் செலுத்தும் விடயத்தில் அரசமைப்பு மீறல்கள் இடம்பெற்றதா?

### விசாரிக்கக் கோருகிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, செப். 27

வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்த முடியாது என்று அரசாங்கம் கூறிய விடயத்தில் அரசியலமைப்பு மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பாக நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி வெளிநாட்டு கடன்களை மீள செலுத்த முடியாது என்று அரசாங்கம் கூறும் போது நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகிய அரசியல மைப்பை மீறி சில 11

# நவம்பர் 13 பட்ஜெட் உரை!

கொழும்பு, செப். 27

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை நவம்பர் 13 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்தவுள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் 11

# சுகாதார அமைச்சு பதவியை மறுத்தாரா ரமேஷ் பத்திரன?

### பிரியதர்ஷன யாப்பாவின் பெயர் முன்மொழிவு

கொழும்பு, செப். 27

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்காவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னர் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை அழைத்து சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யுமாறு கூறியதாக சில வார இறுதி நாளிதழ்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அதேபோன்று அமைச்சர் ரமேஷ் பத்திரன புதிய சுகாதார அமைச்சராக பதவிப் பிரமாணம் 11

## இப்படியும் நடக்கிறது

திலீபனின் நினைவு வைபவங்கள் இவ்வாண்டு சுமுகமாக நடந்து முடிந்திருக்கின்றன. சுமுகமாக என்று நம் சொல்ல வருவது, நல்லூரில் நடந்த பிரதான வைபவங்களையே.

ஆனால், இவ்வாண்டு திலீபன் நினைவு ஊர்திதான் தெற்கில் அதிகம் பேசுபொருளாகியிருந்தது.

திலீபனின் நினைவு ஊர்தி மீதான தாக்குதல் பற்றி ஒரு தெற்கு நண்பர் தனது முகநூலில் எழுதியிருந்தார். அவருடன் அவர் எழுதியிருந்த பல விடயங்களில் இருக்கும் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவரோடு தர்க்கித்த போது தான் தெரியவந்தது, முன்னணியினர் இந்த ஆண்டு தான் அப்படியோர் ஊர்தியை நடத்தியதாக அவர் அறிந்திருந்ததை.

பல ஆண்டுகளாக முன்னணியினர் இதுபோன்ற வாகன ஊர்தியை நடத்திவருகின்ற செய்தியை அவரிடம் சொன்ன போது, அவரால் அதனை நம்ப முடியவில்லை.

அண்மைக்காலமாக முன்னணியினர், குறிப்பாக அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிவைக்கப்படுவது பற்றி முன்னரும் ஒருதடவை இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

கொழும்பில் அவரின் வீட்டுக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் பற்றி எழுதிய போது, ஏன் இந்த ஆர்ப்பாட்டம் என்ற சந்தேகத்தை நாம் எழுதியிருந்ததுபோலவே இப்போது பலரும் எழுதத் தொடங்கியிருக்கின்றனர். தமிழர் விவகாரத்தில் இந்தியா அடிக்கடி அழுத்தம் கொடுப்பதும், அதனால் ஆளும் தரப்பு அவஸ்தைப்படுவதும் நாம் அறியாததல்ல. அதற்குக் காரணம் இந்தியாவின் விருப்பத்துக்கு உரியவர்களின் கைகளில் தமிழ் அரசியல் தலைமை இருப்பது என்பதும் கவனத்திற்குரியது. ஆனால், இந்தியாவின் ஆதரவு இல்லாத அல்லது இந்தியாவை தமது நண்பர்களாக கருதாதவர்களின் தலைமையின் கீழ் தமிழ் அரசியல் இருக்குமானால், அது இந்தியா தமிழர் விவகாரத்தில் தற்போது கொடுப்பதுபோன்ற அழுத்தத்தைக் கொடுக்க வேண்டிய தேவையை இல்லாமல் செய்துவிடும்.

இதனையே ஆளும் தரப்பு விரும்புகின்றதோ என்ற சந்தேகம் அண்மைக்காலமாக நடக்கும் சம்பவங்களைப் பார்க்கின்ற போது ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இப்போது அதுவல்ல நாம் இந்தப் பத்தியில் சொல்ல வருவது. திலீபனின் நினைவு ஊர்தி மீது திருகோணமலையில் சர்தார்புர பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலை பற்றி இதற்கு முன்னரும் இந்தப் பத்தியில் விரிவாக பார்த்திருந்தோம். ஊர்தியை நடத்தியவர்களே அதனை தவிர்த்திருக்கலாம் என்றும் முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம். 'நாங்கள் இதற்கு முன்னரும் அதே பாதையால் ஊர்தியை கொண்டு சென்றிருந்தோம். இந்த ஆண்டு கொண்டு செல்வதில் என்ன தவறு' என்று கேட்பதில் நியாயம் இருக்கலாம். ஆனால், அதுவரை நடத்தப்பட்டபோது இருந்த நிலைமைகளுக்கும் இந்த ஆண்டு நிலைமைகளுக்கும் இடையே இருந்த வித்தியாசம் நாம் அறியாததல்ல. கஜேந்திரகுமார் தொடர்ந்து குறிவைக்கப்பட்டு வரும் நிலையில் அதுபோன்ற சம்பவங்களை தவிர்ப்பது நல்லது. ஆனால், அதுபோன்ற தாக்குதல் சம்பவமே திலீபன் குறித்த இளையவர்களின் தேடலுக்கு வழிவகுத்ததாகவும், எனவே அந்தச் சம்பவம் தமிழ் தேசிய உணர்வை இளையவர்கள் மத்தியில் உயிர்ப்புடன் வைத்திருக்க உதவியதாகவும் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டதையும் காணமுடிந்தது.

அதனால் தானோ என்னவோ, முன்னணியின் அந்த 'அரசியலுக்கு' போட்டியாக தாமும் செய்யவேண்டும் என்ற நினைப்புடன் தமிழரசுக் கட்சியும் திலீபன் நினைவாக ஓர் ஊர்தியை ஏட்டிக்குப் போட்டியாக ஏற்பாடு செய்திருந்ததைக் காணமுடிந்தது.

தமிழரசு கட்சியிலுள்ள சிலர், முன்னணியின் இந்த ஊர்வலத்தை தேவையில்லாத ஒன்று என்று வர்ணித்திருந்த நிலையில் தமிழரசு கட்சியின் சில இளம் 'தலை'கள் அப்படியோர் ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தமை பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

ஆனால், அது தமிழரசு கட்சியின் நிர்வாக திறனையும் கட்சியின் கட்டுக்கோப்பையும் பறைசாற்றுவதாகவும் இருந்தது.

முன்னணி திலீபன் நினைவாக நடத்திய ஊர்திப் பவனி என்பது அவர்களின் கட்சி ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக நடத்தப்பட்ட ஒன்று என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், தமிழரசு கட்சியில் சிலர் கட்சியின் முடிவைக் கேட்டு, கட்சியின் சம்மதத்துடன்தான் அதுபோன்ற ஊர்வலத்தை நடத்தினார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

முன்னணி ஊர்தியை நடத்தி அதன்மூலம் அவர்கள் அரசியலில் 'சில மைல் கற்களை' எட்டுகின்ற போது அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக இன்னுமோர் ஊர்வத்தை நடத்துவது எந்த வகையிலும் யாருக்கும் உதவப் போவதில்லை.

உண்மையில் அது திலீபனின் தியாகங்களை கொச்சைப்படுத்தவே செய்யும்.

திலீபனை தமது சுய அரசியலுக்காக மட்டும் இவர்கள் காவித் திரியும்போது, முகநூலில் திலீபன் தொடர்பாக செய்யப்பட்ட பதிவுகளை முகநூல் நீக்கியிருக்கிறது. எமது பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டியை அடைந்துவிட சர்வதேசம் நம்மோடு இருக்கும் என்று இப்போதும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள் நம்மில் சிலர். ஆனால், அவர்களுக்கு திலீபன் பற்றி முகநூலை நம்பவைக்கக் கூட தம்மால் முடியவில்லை என்பது தெரியாமலிருப்பது கவலைக்குரியது.!

**- ஊர்க்குருவி.**

## நல்லூரில் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல்














படங்கள் : ஐ.சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu
27.09.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# இலங்கைக்கு இன்னொரு சாதகம்

கனடாவுக்கும் - இந்தியாவுக்குமான முரண்பாட்டில், இலங்கை முற்றிலும் இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. கனேடிய பிரதமர் இலங்கை விடயத்திலும் இவ்வாறுதான் பொய்யுரைத்தார் - அவர் தொடர்ந்தும் பொய்களையே கூறி வருகின்றார்- என்று, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் குற்றச்சாட்டை ஆதரித்திருக்கும் அலி சப்ரி, கனடா, பயங்கரவாதிகளுக்கான சரணாலயமாக தொழிற்படுவதாகவும் குற்றம் சாட்டியிருக்கின்றார். இலங்கை, சந்தர்ப்பத்தை கச்சிதமாக பயன்படுத்திக் கொள்கின்றது.

இந்தியாவுக்கு எதிரான சீக்கிய பயங்கரவாதிகளுக்கு, கனடா தொடர்ந்தும் அடைக்கலம் வழங்கி வருவதாக - இந்தியா, குற்றம்சாட்டி வருகின்றது. டைகர் போஸ் - எனப்படும் சீக்கிய பிரிவினைவாத அமைப்பானது, இந்தியாவினால் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். தற்போது கொல்லப்பட்டுள்ள சீக்கிய தலைவர், இந்தியாவினால் தேடப்பட்டுவரும் ஒருவர். ஆனால் அவ்வாறான ஒருவர் கனடாவில் சுதந்திரமாக செயற்பட்டுவருகின்றார். அதற்கான அனுமதியை கனடா வழங்கியிருந்தது.

குறிப்பிட்ட நபர், கடந்த ஜுன் மாதம் கொல்லப்பட்டிருந்தார். இவ்வாறானதொரு சூழலில், குறித்த கொலைக்கு பின்னால் இந்தியா இருந்ததாக கடனடிய பிரதமர் ஜஸ்டின் ருடே தெரிவித்ததை தொடர்ந்தே, இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவின் மீதான குற்றச்சாட்டு சர்வதேச அளவில் சிக்கலான விடயமாக மாறியிருக்கின்றது. குளோபல் சவுத் நாடுகளுக்கான குரலாக இந்தியா மாறியிருக்கின்ற நிலையில், கனேடிய பிரதமரின் கருத்துக்கள் பாரதூரமான ஒன்றாக நோக்கப்படுகின்றது. கனேடிய பிரதமரின் கருத்தை பலரும் வரவேற்கவில்லை. வெறும் உள்ளூர் அரசியல் ஆதாயத்திற்காகவே இவ்வாறானதொரு கருத்தை பொது வெளியில் ஜஸ்டின் தெரிவித்திருப்பதாகவே பலரும் நோக்குகின்றனர். செல்வாக்கில் சரிவை சந்தித்துவரும் கனேடிய பிரதமர், இவ்வாறானதொரு கருத்தை தெரிவித்து, கட்சியின் ஆதரவாளர் மத்தியில் செல்வாக்கை தேடிக் கொள்ள முற்படுவதாகவே பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுளிலும் நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடியது. ஏனெனில் சீக்கியர்களோடு ஒப்பிட முடியாவிட்டாலும், தனிநாட்டுக்கான ஆதரவை முன்வைக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் கனடாவில் செயற்பட்டு வருகின்றன. இதனை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. இந்த நிலையில் இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதன் ஊடாக, கனடாவை சர்வதேச அரங்குகளில் விமர்சிப்பதற்கான நல்லதொரு வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது.

இந்திய-கனேடிய முரண்பாட்டின்போது, கனடாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதன் ஊடாக, குளோபல் சவுத் நாடுகளின் ஆதரவை இலங்கை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். இந்த இலக்கை முன்வைத்தே, அலிசப்ரி மேற்படி கருத்தை முன்வைத்திருக்கின்றார். இந்திய விடயத்தில் பொய்யுரைப்பது போல்தான், இலங்கை விடயத்திலும் கனடா பொய்யுரைத்து வருகின்றது - இவ்வாறு வாதிடுவது இலங்கைக்கு மேலும் இலகுவாகியிருக்கின்றது.

கணிசமான புலம்பெயர் தமிழ் மக்களைக் கொண்டிருக்கும் நாடு என்னும் வகையில், தமிழ் மக்களின் மனித உரிமைமீறல் விடயத்தில், கனடா ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்திவருகின்றது. ஆனால் மறுபுறம் கனடா பயங்கரவாதிகளுக்கான சரணாலயமாக தொழிற்படுவதாக இந்தியா குற்றம் சாட்டுகின்றது. கனடா உலகளவில் ஒரு செல்வாக்கான குரல் இல்லை. ஆனால் இந்தியா ஒரு குவாட் நாடு. இந்தோ - பசுபிக் மூலோபாயத்தில் முக்கிய பங்காளி அத்துடன் குளோபல் சவுத்தின் தலைமை. இந்த நிலையில் கனடிய - இந்திய முரண்பாடு, தமிழர் விவகாரத்தில் மேலும் பின்னடைவுக்கே வழிவகுக்கும். இலங்கையை அரசுக்கோ, இது முற்றிலும் சாதகமானது. கனடா, பிரிவினைவாத தமிழர்களுக்கு ஆதரவாக தொழிற்படுவதான பிரசாரமொன்றை முன்வைப்பதற்கு, இலங்கையை பொறுத்தவரையில், கனேடிய சீக்கிய விவகாரமானது, பழம் நழுவி பாலில் விழுந்ததற்கு ஒப்பானது.

# கற்பிட்டிக்கு ஒரு சட்டம் யாழுக்கு ஒரு சட்டமா?

## வர்ணகுலசிங்கம் காட்டம்

*வடமராட்சி செப்25*

*கற்பிட்டிக்கு ஒரு சட்டம் யாழ்ப்பாணத்திற்கு ஒரு சட்டமா என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன முன்னாள் உப தலைவரும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவருமான நா.வர்ணகுலசிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார்.*

*நேற்று வடமராட்சியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றில் கடற்றொழில் நீரியல் வளத்துறையினரால் கூட்டம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டு அந்தக் கூட்டத்திற்கு கொழும்பிலிருந்து நீரியல் வளத்துறை அதிகாரிகள் வருகை தந்திருக்கிறார்கள்.*

*இங்கே உள்ள சங்கங்களுக்கு அறிவித்ததாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல முக்கியமான கடற்றொழில் அமைப்புகளுக்கு அறிவிக்கவில்லை.*

*ஒரு கட்சி சார்ந்த ஆள்களுக்கு அறிவிக்கப்பட்டே அந்தக் கூட்டமானது இடம் பெற்றிருக்கிறது.*

*கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் உட்பட கட்சி சேர்ந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் கட்சி சேராத கட்சிக்கு ஆதரவான இரண்டு பேர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மொத்தம் 14 பேர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.*

*அந்த கூட்டத்தில் கடற்தொழில் புதிய திருத்தச் சட்டம் என்ற போர்வையில் ஒரு புத்தகம் கொண்டு வந்து அங்குள்ளவர்களுக்கு கொடுத்து விளங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது*

*அதில் அதிகாரி ஒருவர் உரையாற்றி இதுதான் இப்போது கொண்டுவரவிருக்கும் சட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

*அதில் இருந்த பச்சோந்தியொருவர் இந்த சட்டம் சரி என்று சொல்லியபோது, நெடுந்தீவில் இருந்து வந்த சமாசப் பிரதிநிதியும் இன்னும் ஒருவரும் குறித்த சட்டம் தொடர்பில் எதிர்த்திருக்கிறார்கள்.*

*ஏன் இந்த சட்டப் புத்தகத்தில் நடுப்பகுதியில் வெள்ளைப் பேப்பராக இருக்கிறது. ஏன் இடைவெளி விடப்பட்டிருக்கிறது? என்ன காரணம் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.*

*இதனைக் கொண்டு வந்து காட்டி மக்கள் எல்லோரும் மீனவர்கள் சமூகம் ஒப்புதல் தெரிவித்ததாக கூறி அந்த நடுப்பகுதியில் வெற்றிடமாக உள்ள பகுதியில் உங்களுக்கு வேண்டிய விடயங்களை பதிப்பு செய்து அதனை வெளியிடுவதற்குத்தானே இந்த முயற்சியை செய்து இருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.*

*இந்த புத்தகத்தை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய போது அந்தக் கூட்டம் நடந்த இடத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.*

*நிலையில் அங்கு கூட்டத்திலிருந்து அதிகாரி ஒருவர் - இது அச்சு பதிப்பில் ஏற்பட்ட தவறு என்று கூறியுள்ளார். இது இவ்வாறு கூறக்கூடிய கதையா?. ஹோட்டலில் கூட்டம் நடத்துவதற்கு இவ்வளவு காசு, போக்குவரத்து செலவு, சாப்பாட்டுச் செலவு, கொழும்பிலிருந்து இங்கு வந்து இவ்வாறு கூறுவது சரியா?*

*அச்சு பதிப்பு சரியாக பதியவில்லை என்று கூறி ஒரு வதந்தியை பரப்பி இருக்கிறார்கள். அதில் மீண்டும் ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒன்றரை மாதத்திற்கு பின் திருப்பி பதிப்பு செய்யப்பட்டு கூட்டம் ஒன்று நடத்தி முடிவு எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.*

*இது தொடர்பில் நீதியல் வளத்துறை அதிகாரிகளை பலர் தொடர்பு கொண்டு, ஏன் இது தொடர்பில் நீங்கள் எங்களுக்கு அறிவித்திருக்கவில்லை. நாங்களும் கலந்து மொண்டிருப்போம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நீதியியல் வளத்துறை அதிகாரிகள் 16 பேர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்திருக்கிறார்கள் தானே. ஏன் எல்லாருக்கும் அறிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.*

*பல கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் அல்லது ஏனைய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இது விடயமாக தெரிவிக்கப்படவில்லை. தங்களுக்கும் தங்கள் கட்சி சார்ந்தவர்களுக்கும் அறிவிக்கப்பட்டு தங்களுக்கு சார்ந்த சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொண்டுருக்கிறார்கள்.*

*இவ்வாறு ஒரு கேவலமான விடயத்தை இந்த நீரிதியல் வளத்துறை மேற்கொண்டு வருகிறது.*

*இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பாராளுமன்றம்வரை கொண்டு செல்லப் போகிறார்கள்.-என்றார். (அ)*

# கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு கிளிநொச்சி இளைஞர் மரணம்

கிளிநொச்சி, செப். 27


கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது.

கிளிநொச்சி - கோணாவில் - ஊற்றுப்புலம் கிராமத்தின் நாற்சந்தியிலேயே இந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புஷ்பராசா தினேஸ்கரன் (வயது 30) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைத்தனர். அத்துடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

**செப்ரெம்பர் - 27 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - புரட்டாதி 10**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : திரையோதசி**




**மேடம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். சின்னச்சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கன்னி**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். பணிகளை முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து செல்ல வேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் செலவு வைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

# தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பு; எதிர்த்து முடங்கியது பெங்களூர்!

பெங்களூர், செப். 27

காவிரி நீர் தொடர்பாக கர்நாடகம் - தமிழ்நாடு இடையே மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. காவிரி நீரைத் திறக்கும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட கோரி உச்சநீதிமன்றில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

அந்த மனு மீது விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தமிழகத்துக்குத் தினமும் வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்கும்படி கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் கடந்த 18ஆம் திகதி உத்தரவிட்டது.

தங்களிடம் போதிய நீர் இல்லாததால் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த கர்நாடகம் மறுத்துவிட்டது. இந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் மனு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவுப்படி தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டனர்.

இதையடுத்து காவிரியில் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதை கண்டித்து மண்டியா உள்ளிட்ட காவிரி படுகை பகுதிகளில் போராட்டம் வெடித்துள்ளது. கடந்த 23ஆம் திகதி மண்டியாவில் முழு அடைப்பு நடத்தப்பட்டது. இந்த நிலையில் கர்நாடக நீர் பாதுகாப்பு குழு, பெங்களூரில் நேற்று முழு கதவடைப்பு போராட்டம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதையடுத்து, சகல நிறுவனங்கள், கடைகள், பாடசாலைகள், வணிக வளாகங்கள், திரையரங்குகளும் மூடப்பட்டன. போக்குவரத்து சேவையும் நிறுத்தப்பட்டது. வன்முறைகள் ஏற்படாமல் தடுக்க ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# மோடி அரசின் ஆட்சியில் மாநில உரிமைகள் மீது அடி தொடர்கிறது!

## முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம்

சென்னை, செப். 27

மோடி அரசின் ஆட்சியில், மாநில உரிமைகளின்மீது அடி விழுவது தொடர்கிறது என்று மத்திய அரசின் முன்னாள் நிதித்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் தனது சமூகவலைத்தளப் பதிவில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்கு இனி புதிய மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி கிடையாது என்றும் ஏற்கனவே தமிழகத்தில் இயங்கும் மருத்துவக் கல்லூரிகளுக்கு கூடுதல் கல்வி இடங்கள் அளிக்கப்படாது என்றும் தேசிய மருத்துவக் கழகம் அறிவித்தது உண்மை என்றால், அது நல்ல செயல்பாட்டை தண்டிப்பதாக அமைந்துவிடும்.

இது, மாநில அரசு மற்றும் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் மீது ஆக்கிரமிப்பு செய்யும் மற்றுமொரு மோசமான நிகழ்வாகும். ஏன் மாநில அரசு தனது சொந்த மாணவர்களுக்காக தனது சொந்த நிதியை பயன்படுத்தி புதிய மருத்துவ கல்லூரியை தொடங்கக் கூடாது? மத்திய அரசும் அதன் முகமைகளும், கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையை அறுக்கின்றன. மோடி அரசின் ஆட்சியில், மாநில உரிமைகளின்மீது அடி விழுவது தொடர்கிறது - என்றுள்ளது.

(ஐ)

# பா. ஜ. கவுடன் எப்போதும் தேர்தல் கூட்டணி கிடையாது!

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, செப். 27

பா. ஜ. க. கூட்டணியில் இருந்து விலகியது தொடர்பாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அந்தக் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பேசும்போது பா.ஜ.க. உடன் இனி எப்போதும் கூட்டணி கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.வுடன் இன்றும் கூட்டணி இல்லை, இனி என்றும் கூட்டணி இல்லை. பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி அமைக்கப்படும். கூட்டணி முறிவால் எந்த பிரச்னை வந்தாலும் அதனை சந்திக்க தயார். கூட்டணி முறிவு குறித்து தொண்டர்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

## பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணி முறிவை நாம் வரவேற்கிறோம்!

### நாம் தமிழர் கட்சி சீமான்

சென்னை, செப். 27

பா. ஜ. க. - அ. தி. மு. க. பிரிந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு, "பா. ஜ. க. கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. பிரிந்துள்ளது மிகிழ்ச்சிக்குரியது. பா. ஜ. க. - அ. தி. மு. க. முறிவு என ஜெயக்குமார் தெரிவித்த போதே அந்த முடிவை வரவேற்று வாழ்த்தினேன்.

தமிழ்நாட்டில் பா. ஜ. க. - காங்கிரஸ் இரண்டும் வேண்டாம். எந்த மத்திய கட்சிகளுடனும் கூட்டணி கூடாது என்பதே எங்கள் நிலைப்பாடு. என் மொழி, வழிபாடு, உரிமைகளை காக்க தேசிய கட்சிகள் வராது. ஒரு தொங்கு சதை போல பா. ஜ. கவை தூக்கி சுமக்க வேண்டிய அவசியமில்லை. தற்போது கூட்டணியில் இருந்து விலகுவதாக எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளதை வரவேற்கிறோம். பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என அ. தி. மு. க. அறிவித்ததில் உறுதியாக இருக்கவேண்டும்."

- என்றார். (ஐ)

## அ. தி. மு. கவுடனான கூட்டணி முறிவு; தேசிய தலைமையை முடிவெடுக்கும்!

### பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை

சென்னை, செப். 27

அ. தி. மு. க. மற்றும் பா. ஜ. க. கட்சிகள் இடையே இருந்து வந்த கூட்டணி முறிந்து விட்டதாக அ. தி. மு. க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பும் அதிகாரபூர்வமாக வெளியாகிவிட்டது.

இந்த நிலையில், பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகுவதாக அ. தி. மு. க. அறிவித்து இருப்பது பற்றி பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை பேசும் போது,

"தற்போது யாத்திரையில் இருப்பதால், அ.தி.மு.க. வெளியிட்ட அறிக்கையை என்னால் படிக்க முடியவில்லை. தற்போதைய சூழலில், இந்த விவகாரம் தொடர்பாக எங்களது தேசிய தலைமையே கருத்து தெரிவிக்கும். ஊடகத்தை சார்ந்த அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கென தனி கோட்பாடுகள் உள்ளன. எங்களது தேசிய தலைமை சரியான நேரத்தில் கருத்து தெரிவிக்கும்," என்றார். (ஐ)

# சீனக் கப்பல் இலங்கை வருவதற்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை!

## மீண்டும் கூறினார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, செப். 27

**சீன கப்பல் இலங்கை வருவதற்கான அனுமதியை இலங்கை வழங்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.**

**ஏ. என். ஐக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

**சீனாவின் கப்பல் இலங்கையில் தரித்து நிற்பதற்கு இலங்கை அனுமதி வழங்கவில்லை. இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகள் இலங்கையின் பாதுகாப்பு கரிசனைகள் என்றும் அவர் இதன்போது கூறினார்.**

ஒக்ரோபர் ஆறாம் திகதி சியான் 6 என்ற சீனா கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வரவுள்ளது. இது தொடர்பிலும் இந்தியாவின் கரிசனைகள் குறித்த கேள்விக்கும் பதிலளித்துள்ள அலி சப்ரி,




"வெளிநாட்டு கப்பல்கள் விமானங்கள் இலங்கை வருவது குறித்து இலங்கையிடம் நிலையான இயக்க முறை உள்ளது இது குறித்து இந்தியா உட்பட நேச நாடுகளுடன் கலந்தாலோசித்துள்ளது.

சில காலமாக உரையாடலொன்று இடம்பெறுகின்றது இந்தியா நீண்டகாலமாக தனது கரிசனைகளை வெளியிட்டுள்ளது. ஆனால் நாங்கள் தற்போது வெளிநாட்டு கப்பல்கள், விமானங்கள் இலங்கை வருவது குறித்து இலங்கையிடம் நிலையான இயக்க முறையொன்றை உருவாக்கியுள்ளோம்.

அதனை உருவாக்கும்போது இந்தியா உட்பட பல நேச நாடுகளுடன் அது குறித்து ஆராய்ந்தோம். வெளிநாட்டு கப்பல்கள், விமானங்கள் இலங்கையின் நிலையான இயக்க முறையை பின்பற்றுகின்ற வரை பிரச்னையில்லை. அதனை பின்பற்றாவிட்டால் பிரச்னையே.

சி யான் 6 இலங்கையில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை இன்னமும் பேச்சுகள் இடம்பெறுகின்றன - என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)



# நாவலர் மகா வித்தியாலயத்தின் 175ஆவது ஆண்டு நிறைவு விழா!

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க. கலியுகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலய கல்வி பணிப்பாளரும் ஆறுமுக நாவலர் தர்மகர்த்தா சபை தலைவருமான பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச் சிலை மற்றும் நால்வர் திருக்கோவில் என்பவற்றில் வழிபாடுகள் நடைபெற்றன.

கோட்டக்கல்வி பணிப்பாளர் நா. சிவநேசன் மற்றும் நாவலர் தருமகர்த்தா சபையினர் பழைய மாணவர்கள் எனப் பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

# ஆசிய வங்கியிமிருந்து கடன் அமைச்சரவை அனுமதியளிப்பு

கொழும்பு, செப். 27

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கொள்கை அடிப்படையிலான விசேட கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து குறித்த வேலைத்திட்டத்திற்காக 20 கோடி அமெரிக்க டொலர் வீதம் கொள்கை அடிப்படையிலான தலா 2 கடன் வசதிகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

முதலாவது துணை வேலைத்திட்டத்தின் கீழ், 2 சதவீத வருடாந்த வட்டி வீதத்தில் 5 வருட சலுகைகாலத்துடன், 25 வருட மீள் செலுத்துகை தவணை காலத்துக்கான கடனை பெறும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ)

# தயாசிறியிடம் விளக்கம் கோரிய கடிதத்தை இடைநிறுத்தியது மன்று

கொழும்பு, செப். 27

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவிடம் விளக்கம் கோரி கட்சியின் தலைவர் பிறப்பித்த தடை உத்தரவை இடைநிறுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த தடை உத்தரவை ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரையில் அமுல்படுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், தயாசிறி ஜயசேகரவுக்கு அவ்வாறானதொரு கடிதத்தை வழங்குவதற்கு கட்சியின் மத்திய குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக மைத்திரிபால சிறிசேன சார்பில் வாதிட்ட ஜனாதிபதியின் சட்டத்தரணி பைசர் முஸ்தபா நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

# துப்பாக்கி முனையில் 60 இலட்சம் கொள்ளை

கொழும்பு, செப். 27

மீகொடையில் உள்ள தளபாடக் கடையொன்றில் நுழைந்த இரு கொள்ளையர்கள் சுமார் 60 இலட்சம் ரூபாயை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இருவரும் தலைக்கவசம் அணிந்து கடைக்குள் நுழைந்து, ரி-56 துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கியை காட்டி தொழிலாளர்களை மிரட்டி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது.

சம்பவத்தையடுத்து, கொள்ளையர்கள் அந்தப் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

மீகொடை பொலிஸார் சி. சி. ரீ. வி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

# அவிசாவளை வர்த்தகர் கொலை; ஊடகவியலாளர் உட்பட மூவர் கைது

கொழும்பு, செப். 27

அவிசாவளை தல்துவ பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இலங்கையில் உள்ள தனியார் ஊடக நிறுவனமொன்றின் ஊடகவியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் டுபாயில் இருந்து செயற்படும் பிரபல குற்றவாளியான 'மன்னா ரமே/க்கு' துப்பாக்கிச் சூட்டுக்கு மூளையாக செயல்பட்ட அந்த பத்திரிகையாளர் இரகசிய தகவலை வழங்கியதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகளால் நேற்றிரவு மீகொடை பிரதேசத்தில் வைத்து ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த ஊடகவியலாளர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியில் அவர் தொடர்பில் இருந்தமை தெரிய வந்துள்ளது.

'மன்னா ரமேஷ்' என்பவர் ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பல தடவைகள் பணம் செலுத்தியுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு அடைக்கலம் வழங்கிய ஊடகவியலாளர் மற்றும் மூன்று பேர் அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

குறித்த ஊடகவியலாளரை 72 மணித்தியாலங்கள் விளக்கமறியலில் வைக்க பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ள அதேவேளை, ஏனைய மூன்று சந்தேகநபர்களை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டது.

# ஜனாதிபதியின் அமெரிக்க பயணத்தால் பல நன்மைகள்

## ருவான் விஜயவர்த்தன

கொழும்பு, செப். 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க பயணம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகிற போதும், இந்தப் பயணத்தால் நாட்டுக்கு பல நன்மைகள் ஏற்படும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஏனைய உலக வல்லரசுகளுக்கு இடையிலான நட்புறவு மேலும் வலுவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன, அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற பின்னர், அங்கு வெற்றிகரமாக இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நாட்டுக்கு பல சாதகமான முடிவுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ஐ)

# திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுவோர் டுபாயிலிருந்தே செயல்படுகின்றனர்!

## அமைச்சர் டிரான் அலஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 27

**நாட்டில் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெரு மளவானவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தே செயல் படுகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

அவர்களை இலங்கைக்கு கொண்டுவந்து சட்டநடவடிக்கை எடுப்பது குறித்து ஐக்கிய அரபு இராச்சியத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் குறிப்பாக டுபாயில் வசிக்கின்றனர் தங்கள் சகாக்கள் மூலம் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களை கண்டுபிடிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பியவேளை அவர்களை கண்டுபிடிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்தின் அதிகாரிகளை தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எத்தனை பேர் அங்குள்ளனர் என்ற கேள்விக்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ளனர் எனினும், துல்லியமான எண்ணிக்கை தெரியாது என டிரான் அலெஸ் தெரிவித்துள்ளார். நாட்டின் முதல் காலாண்டு பகுதியில் 35 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன 20 பேர் கொல்லப்பட்டனர். (ஐ)

# மருந்து கொள்வனவு குறித்து ஆராயும் உப குழு இன்றையதினம் கூடுகின்றது

கொழும்பு, செப். 27

மருந்து பற்றாக்குறை மற்றும் மருந்துக் கொள்வனவு தொடர்பான பிரச்சனைகளை ஆராய்வதற்காக பொதுக் கணக்குக் குழுவால் நியமிக்கப்பட்ட உப குழு இன்று புதன்கிழமை முதன்முறையாக கூடவுள்ளது.

இந்த சந்திப்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக உப குழுவின் தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, அசோக் அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் உப குழுவின் ஏனைய உறுப்பினர்களாக உள்ளனர். நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடயம் தொடர்பான முழுமையான அறிக்கையை கோபாவிடம் ஒப்படைக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இதேவேளை, சுகாதார அமைச்சுக்குள் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக மற்றுமோர் உப குழு அண்மையில் நியமிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட தலைமையிலான இந்த உப குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, விமலவீர திஸாநாயக்க, மஞ்சுள திஸாநாயக்க, வீரசுமண வீரசிங்க மற்றும் முதித பிரஷாந்தி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (அ)

# அவசியம் ஏற்பட்டால் நிபா வைரஸ் பரிசோதனை முன்னெடுக்கப்படும்

கொழும்பு, செப். 27

அவசியமாயின் நிபா வைரஸ் பரிசோதனைக்காக அன்ரிஜன் சோதனை கருவிகளை இலங்கைக்கு கொண்டு வர தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிபா வைரஸ் 1999ல் முதல் முறையாக மலேசியாவில் பரவியது. இந்தநிலையில், அண்மையில் இந்தியா - கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து, நிபா வைரஸ் காரணமாக இது வரையில் கேரளாவில் 2 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 6 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கேரள சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேநேரம், நிபா வைரஸ் அறிகுறிகளுடன் இணங்காணப்பட்டவர்களின் ஆயிரத்து 233 பேருக்கு பரிசோதனைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளதுடன், அவர்களில், 352 பேருக்கு நிபா வைரஸ் தொற்றுக்குள்ளாவதற்கான சாத்தியம் உள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான பின்னணியில் எதிர்காலத்தில் இலங்கையில் சில பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அது தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# முரளிதரனின் திரைபடத்துக்காக நாட்டின் சட்டம் மாற்றப்பட்டது!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு




கொழும்பு, செப். 27

உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளராகக் கருதப்படும் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ‘முரளி-800’ திரைப்படத்தை திரையிட இலங்கை திரைப்பட காட்சி சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

‘முரளி-800’ திரைப்படம் வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி முதல் திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

‘முரளி-800’ திரைப்படத்துக்காக கொழும்பு சினமன் லேக் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, முரளியின் மீதான மரியாதையின் அடையாளமாக இலங்கை திரைப்பட சட்டமும் விசேட அனுமதியளித்து மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நாட்டு திரைப்பட விதிகள் மற்றும் விதிமுறைகளின் படி ஒரு வெளிநாட்டுப் படத்தை மொழிபெயர்ப்புடன் காட்ட அனுமதி இல்லை.

ஆனால், முரளி நம் நாட்டுக்கு கொண்டு வந்த கௌரவம், மரியாதையை கருத்தில் கொண்டு தமிழ் மொழி படத்தின் சிங்கள மொழிமாற்றத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி வழங்கப்படுவது இதுவே முதல் மற்றும் கடைசி முறை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சமதான நீதவான்களாக நன்னடத்தை அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை!




கொழும்பு, செப். 27

அனைத்து நன்னடத்தை அதிகாரிகளையும் சமாதான நீதவான்களாக நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சட்ட விவகாரங்களுக்குத் தேவையான சத்தியக் கடதாசிகளைப் பெறும் போது பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நன்னடத்தை அதிகாரிகளை சமாதான நீதவான்களாக நியமிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் பிரகாரம் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ 2347/10-2023 வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

வர்த்தமானியின் படி, நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஒவ்வொரு நன்னடத்தை அதிகாரியும், செயலில் நிரந்தர சேவையில் உள்ளவர்களும், அத்தகைய அதிகாரி நியமிக்கப்படும் மாகாணத்தின் அந்தந்த நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதியரசராக இருக்க வேண்டும்.

மேலும், பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேசிய ஒருங்கிணைப்பு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரும், செயலில் நிரந்தர சேவையில் இருப்பவர்களும், பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த அந்தந்த நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதியரசராக இருப்பார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சட்ட நடவடிக்கைகளில் தேவையான பிரமாணப் பத்திரங்களைப் பெறுவதில் உள்ள அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக நன்னடத்தை அதிகாரிகளுக்கு சமாதான நீதவான்களை நியமிக்க வேண்டிய தன் அவசியத்தை கருத்திற் கொண்டு சிறுவர்களுக்கான பாராளுமன்றக் குழுவின் தலையீட்டை கருத்தில் கொண்டு நீதி அமைச்சர் வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இது குழந்தைகளுக்கான பாராளுமன்ற குழுவில் நீண்ட விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தங்கள் கவலைகள் மற்றும் ஆலோசனைகளை மன்றத்தில் முன்வைத்த பங்குதாரர்கள், நீதித்துறைச் செயற்பாட்டின் போது, நன்னடத்தையின் கீழ் இருக்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உறுதிமொழிப் பத்திரங்களைப் பெறுவதற்கு மூன்றாம் தரப்பினரை குறிப்பிடும்போது சிரமத்துக்கு உள்ளாகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

சுற்றாடல் பிரச்சனைகள்:

# ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் இலங்கையில் கலந்துரையாடவுள்ளனர்



கொழும்பு, செப். 27

பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஆசிய - பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் ஐந்தாவது கலந்துரையாடல் ஒக்ரோபர் 03 - 06 திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளதென சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அதன் பிரதான அமர்வு ஒக்ரோபர் 05 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளதோடு, ஐ. நா. சுற்றாடல் நிகழ்ச்சி நிரல் மற்றும் சுற்றாடல் அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்யவுள்ள குறித்த நிகழ்வில் பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடுகள், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகள் உட்பட ஏனைய தரப்புகளுக்கும் வாய்ப்பளிக்கபடும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்முறை கலந்துரையாடலில் ஆசிய பசுபிக் வலயத்தின் 41 நாடுகளின் அமைச்சர்கள், 300க்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் 100இற்கும் அதிகமான தொழில்வாண்மையாளர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்ப்பதாகவும், 2024 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01 ஆம் திகதி வரை நைரோபில் நடைபெறவிருக்கும் ஆறாவது ஐ.நா சுற்றாடல் சபையின் அமர்வுக்கு இணையாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# ஐ. எம். எவ்வின் 2ஆம் கட்ட உதவியை இலங்கை பெறமுடியாது போகலாம்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, செப். 27

**வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவது தொடர்பில் இந்த மாதத்துக்குள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ஆனால், மாதம் முடிவடைவதற்கு இன்னும் 5 நாட்களே இருக்கின்றன. இதுவரை எந்த இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை. இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் போனால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவியை எங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் அபாயம் இருக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெறப்போகும் புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்றும் அது தொடர்பில் பாதுகாப்பு பிரிவினர் அலட்சியமாக இருந்தமையாலே இந்த சம்பவத்தை தடுக்க முடியாமல் போனதா எனப் பலரும் கேட்கின்றனர். அது உண்மை. அன்று புலனாய்வு தகவல்களை உதாசீனம் செய்யாமல் நடவடிக்கை எடுத்திருந்தால் ஈஸ்டர் குண்டு தாக்குதலை தடுத்திருக்கலாம்.

அவ்வாறானதோர் அச்சுறுத்தலே 2020 மார்ச் 7ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராகவும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருக்கும் போது சர்வதேச நாணய நிதியம் மத்திய வங்கிக்கு விடுத்திருந்தது. அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை பிழை. தன



வந்தர்களுக்கு வரி விலக்களிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் பிழை. இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பாரிய நிதி நெருக்கடிக்கு ஆளாகி வங்குரோத்து நிலை அடையும் என இரகசிய கடிதம் ஒன்றை வழங்கி இருந்தது.

ஆனால், அந்த அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் சிலர் நாணய நிதியத்தின் எச்சரிக்கை கடிதம் தொடர்பில் கருத்தில் கொள்ளாமல் வீறாப்பு பேசி வந்தார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல் எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்பு முடியும் என தெரிவித்து வந்தார்கள். ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி செப்பனிடும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும்போது, இதற்கு பணம் எவ்வாறு பெற்றுக்கொள்வது என கேட்டபோது போதுமான அளவு பணம் இருப்பதாக பதிலளித்தார்கள். அதேபோன்று அன்றிருந்த மின்சார அமைச்சர், எரிபொருள் அமைச்சர்களும் இவ்வாறே பதில் சொன்னார்கள். இறுதியில் நாடு பாதாளத்தில் விழும்வரைக்கும் அவர்களுக்கு தெரியாது.

அத்துடன், இந்த மாதம் மிகவும் தீர்மானம் மிக்கதாகும். வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவது தொடர்பில் நாங்கள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ஆனால் மாதம் முடிவடைவதற்கு இன்னும் 5 நாட்களே இருக்கின்றன. இதுவரை எந்த இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை. இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் போனால் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பட்டின் இரண்டாம் கட்டத்துக்கு செல்ல எங்களுக்கு முடியாமல் போகும் அபாயம் இருக்கிறது. அதனால் எமது நாடு இன்னும் பாதாளத்தில் தொங்கிக்கொண்டுதான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்.



# மக்கள் குடியிருப்பில் தீ; 9 குடும்பங்கள் பாதிப்பு!

பதுளை, செப். 27

பதுளை - மாப்பாகலை பகுதியில் உள்ள நெடுங்குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலால் 9 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தத் தீ விபத்து இடம்பெற்றது. தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீப்பவரலில் மாப்பாகலை பெருந்தோட்ட நெடுங்குடியிருப்பில் அமைந்திருந்த 6 வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், பதுளை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தீயால் பாதிக்கப்பட்ட 9 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் அருகிலுள்ள பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இறுதிச் சடங்கில் பங்கேற்ற கோட்டாபயவுக்கு பாதுகாப்பு

கொழும்பு, செப். 27

காலியில் சுட்டுக் கொல்லப்பட்ட கோடீஸ்வர வர்த்தகர் லலித் வசந்த மெண்டிஸின் உடலுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகல் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி காலி சென்றுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலி டிக்சன் சந்தியில் வைத்து இந்த வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டார். லலித் வசந்த மெண்டிஸ் இராஜாங்க அமைச்சர் டி. வி. சானகாவின் மாமனார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விகாரைகள், ஆலய உண்டியல்களுக்கு அரசு உடனடியாக சீல் வைக்கவேண்டும்

## வனவாசி ராகுல தேரர் கோரிக்கை

கொழும்பு, செப். 27

நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்களின் உண்டியல்களுக்கு அரசாங்கம் உடனடியாக சீல் வைக்க வேண்டும் என தேசிய நாமல் பூங்காவின் ஸ்தாபகர் வனவாசி ராகுல தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி இது தொடர்பான உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கணக்காய்வாளர் மற்றும் பௌத்த சமய விவகார திணைக்களம் என்பன இணைந்து பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்களுக்கு கிடைக்கும் நிதியுதவிகள் தொடர்பான வெளிப்படையான கணக்காய்வை நடத்தவேண்டும்.

நிதியுதவிகள் மற்றும் உண்டியல்களை பாரமரிப்பது விகாரைகளின் விகாராதிபதிகள் அல்ல. அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள், சாரதிகள், பெண்களே பராமரித்து வருகின்றனர்.

பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்களுக்கு கிடைக்கும் நிதி மற்றும் உண்டியல் பணம் என்பவற்றை தனிப்பட்ட செலவுகளுக்கு பயன்படுத்துவது தேசிய குற்றம்.

கொடையாளிகள், பக்தர்கள் வழங்கும் நிதியுதவிகள் கொள்ளையிடப்படுவதால், விகாரைகள் மற்றும் ஆலயங்களில் எந்த அபிவிருத்தியும் நடப்பதில்லை. அந்த நிதியுதவிகளுக்கு என்ன நடக்கின்றது என்பது யாரும் அறியாதது, சிக்கலுக்குரியது- என்றார். (அ)

# மொனராகலையில் நிலநடுக்கம்!

கொழும்பு, செப். 27

மொனராகலை புத்தல பகுதியில் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஒன்று பதிவானதாக புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11.20 அளவில், ரிச்டர் அளவுகோலில் 2.4 மெக்னிடியுட்டாக பதிவாகியுள்ளது.

மொனராகலை மற்றும் படால்கும்பர ஆகிய பகுதிகளிலும் இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், நிலநடுக்கத்தால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. (ஐ)

# நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களை மக்கள் தோற்கடித்தனர்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, செப். 27

எதிர்காலம் பற்றிய தெளிவு கொண்ட ரணில் விக்கிரமசிங்க என்னும் தலைவர் நாட்டின் நலனுக்காக எடுத்த தீர்மானங்கள் அனைத்தையும் மக்கள் தோற்கடித்தனர். அவ்வாறு தோற்கடிக்கப்பட்ட அனைத்து தருணங்களிலும் ஒரு வருடத்தை கடக்கும் முன்னதாக நாடு பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தது என தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் எழுதப்பட்ட "The Right Eye" எனும் புலனாய்வு நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பங்களிப்புடன் இடம்பெற்றது. இதில், பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நான் அரசியலுக்கு பிரவேசித்த போது எமது மரியாதைக்கு பாத்திரமானவரும்




எதிர்காலம் பற்றிய புரிதல் கொண்ட தலைவருமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருந்தார். அரசியலுக்கு மேலதிகமாக நாம் பல்வேறு தெரிவுகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டலை அவரே வழங்கியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க என்னும் எதிர்காலம் பற்றிய தெரிவு கொண்ட தலைவர் நாட்டின் நலனுக்காக எடுத்த தீர்மானங்கள் அனைத்தையும் மக்கள் தோற்கடித்தனர். அவ்வாறு தோற்கடிக்கப்பட்ட அனைத்து தருணங்களிலும் ஒரு வருடத்தை கடக்கும் முன்னதாக நாடு பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தது. எதிர்காலம் பற்றிய அறிவை கொண்டவர் ஜனாதிபதி, அவரை போல நாட்டின் எதிர்காலம் பற்றிய தெரிவு எவரிடத்திலும் இல்லை.

தேர்தலில் மக்கள் எவ்வகையான தீர்வை தந்தாலும், நாடும் மக்களும் பாதாளத்துக்குள் விழுந்து கிடந்த நேரத்தில், துணிச்சலாக சவாலை ஏற்றுக் கொள்ள முன்வந்தவர். அந்த சவால்களையும் நாம் இன்று வெற்றிக்கொண்டுள்ள நிலையிலேயே நூலின் முதற் பிரதியை ஜனாதிபதிக்கு கையளிக்கிறேன் எனத் தெரிவித்தார். (ஐ)

# 700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்க அனுமதி!

திருகோணமலை, செப். 27

**மேலும் 700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கையொப்பமிட்டுள்ளார்.**



கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கிழக்கில் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்க மாகாண பொது சேவை ஆணைக்குழுவிடம் திங்கட்கிழமை கையொப்பம் இடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்தில் 633 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தற்போது 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவும், கல்வி துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாழைச்சேனையில் பஸ் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, செப். 27

வாழைச்சேனையில் இருந்து மீராவோடை வழியாக வாழைச்சேனை-அக்கரைப்பற்று வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் பஸ் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் பஸ் வண்டியின் நடத்துநருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

திங்கள்கிழமை காலை வாழைச்சேனையில் இருந்து மீராவோடை வழியாக அக்கரைப்பற்று நோக்கிச்சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை வாழைச்சேனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் மீது மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் 18ஆம் கட்டைப் பகுதியில் அதிகாலை 5.10 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தண்ணீர்ப் போத்தல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பஸ் கண்ணாடிகள் சிதறியுள்ளதுடன், நடத்துநரும் சிறிய காயங்களுக்குள்ளாகியுள்ளார். தாக்குதலால் பஸ் பிரயாணிகள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டனர். தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# ஜனாதிபதிக்கு எதிராக அறவழிப் போரட்டம்!

**சாணக்கியன் எம். பி.**

மட்டக்களப்பு, செப். 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருகை தரும்போது பெரும் அறவழி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சாணக்கியன் எம். பி. தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு - மாதவனையில் நேற்று 11ஆவது நாளாக மழைக்கு மத்தியிலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, இந்தப் போராட்டத்துக்கு வலு சேர்க்கும் முகமாக பங்கேற்ற அவர், மட்டக்களப்புக்கு ஜனாதிபதி வருகின்றபோது பெரியளவிலான அறவழி போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவித்தார். (ஐ)

# வீதி சமிஞ்சைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரிப்பு

அம்பாறை, செப். 27

அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி சமிக்ஞைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் விபத்துகளும் ஏற்படுகின்றன.

குறிப்பாக கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட முக்கிய சந்திகள் பொது இடங்களுக்கு முன்பாக வீதி சமிக்ஞைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிக்ஞையை அண்டிய பகுதிகளில் போக்குவரத்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டும்கூட பாதசாரிகள் முதல் வாகன சாரதிகள் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடுகளை காண முடிகின்றது.

இவ்வீதி சமிக்ஞைகள் உரிய செயற்பாட்டில் உள்ள போதிலும் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் நிறுத்தல் சமிக்ஞையில் அவ்விடத்தில் நிற்காது பயணம் செய்வதை காண முடிகின்றது.

இது தவிர சில மோட்டார் சைக்கிள் வாகன உரிமையாளர்கள் கூட வீதி சமிக்ஞை குறியீட்டை மதிக்காமல் அவசரமாக நிறுத்தாமல் பயணிப்பதுடன் வீதி விபத்துக்களை ஏற்படுத்தி தப்பிச் செல்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி வீதி சமிக்ஞைகளை மீறும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ)

# திலீபன் நினைவேந்தலுக்கு திருமலை நீதிமன்றம் தடை

திருகோணமலை, செப். 27

தியாக தீபம் திலீபனின் நிகழ்வுக்கு தடை விதித்து திருகோணமலை நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டான் மண்டபம், காந்தி சுற்றுவட்டம் மற்றும் திருகோணமலை பொலிஸ் பிரதேசம் ஆகிய இடங்களில் திலீபனின் நினைவு தின கொண்டாட்டங்கள், அணிவகுப்புகள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம்பெறக் கூடாது என்று நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுக பொலிஸாரால் நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கல்முனையில் கைவிடப்பட்ட வீடுகளில் சமூகசீர்கேடுகள்!

கல்முனை, செப். 27

சுனாமி அனர்த்தம் காரணமாக மக்களால் கைவிடப்பட்டுள்ள வீடுகளில் அண்மைக்காலமாக சமூக சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை மாநகரின் -இஸ்லாமபாத் பகுதியில் சுனாமி அனர்த்தம் காரணமாக பகுதி முழு அளவில் பாதிக்கப்பட்ட வீடுகளில் இவ்வாறு சமூக சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன என்று சாடப்படுகின்றது.

வெளியிடங்களில் இருந்து வருகின்ற சிலரின் சட்டவிரோத செயல்பாடுகள், போதைப்பொருள் பாவனை, பாலியல் செயல்பாடுகளுக்கு இந்த இடங்களை பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மேலும் குறித்த பகுதியில் இயங்கி வருகின்ற காதி நீதிமன்றத்தை சுற்றி காணப்படுகின்ற வீடுகள் யாவும் கைவிடப்பட்டு சுமார் 19 வருடங்களாக



காடு மண்டி காணப்படுகின்றது. இது இவ்வாறான குற்றங்கள் - நடத்தை மீறல்களுக்கு துணையாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனவே, இது விடயத்தில் பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-01)

# பட்டப்பகலில் வீடுடைத்து நகை திருடியவர் கைது!

கல்முனை, செப். 27



பட்டப் பகலில் வீடுடைத்து 28 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகையை திருடியவரை தாம் கைது செய்துள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ். ஏ. ரஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவின் ஆரையம்பதி ஊர் வீதியில் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஒருவ ரின் வீட்டை உடைத்து நுழைந்து தாலிக் கொடியை திருடியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கடந்த 12 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணையை தொடர்ந்து வந்த பொலிஸார் நேற்று முன்தினம் இரவு சந்தேகநபரை கைது செய்தனர்.

சந்தேகநபரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ரஷ்ய படைகளின் கொடுமைகளால் உக்ரைனியரின் பலி தொடர்கிறது!

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

**நியூயோர்க், செப். 27**
**ரஷ்யாவின் பிடிக்குள் உள்ள உக்ரைனின் சில பகுதிகளில் படைகள் மேற்கொண்டு வரும் கெடுபிடிகள் மற்றும் கொடுமைகளால் மக்கள் உயிரிழக்கின்றனர் என்று ஐ. நா. மனித உரிமைகள் கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.**
**உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்து ஒரு வருடம் கடந்துள்ளது. இரு நாடுகளும் கடுமையாகப் போரிட்டு வருகின்றன.**

இந்த நிலையில், உக்ரைனின் சில பகுதிகள் ரஷ்ய கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. இவ்வாறு ரஷ்யா கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ரஷ்யா மேற்கொண்டு வரும் கொடுமைகளால், மக்கள் உயிரிழக்கின்றனர்.

உக்ரைனில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் விசாரணை ஆணையத்துக்கு எரிக் மோஸ் தலைமை வகிக்கிறார். இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய ஆயுதப்படை மேற்கொண்டு வரும் கொடுமைகள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து வருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.




சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கொடுமைகளால் உயிர்ப்பலி ஏற்படுகிறது. எரிக் மோஸ் தலைமையிலான குழு ரஷ்யா ஆக்கிரமித்த உக்ரைன் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வந்தது. இந்த ஆய்வுகளில் ரஷ்ய அதிகாரிகளால் நடத்தப்படும் காவல் மையங்களில் மக்களை கொடுமைப்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது.

இது பற்றிய குற்றச்சாட்டுகளை ரஷியா முழுமையாக மறுத்து இருக்கிறது. இது தொடர்பாக ஆணையத்தில் பதில் அளிக்க ரஷ்யாவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு இருந்தது. எனினும், ரஷ்ய தரப்பு அதிகாரி யாரும் ஆணையத்தில் முன்னிலையாகவில்லை - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# நைஜரில் இருந்து பிரான்ஸ் படைகள் வெளியேறுகின்றன

## ஜனாதிபதி மக்ரோன் அறிவித்தார்

பாரிஸ், செப். 27

நைஜரில் உள்ள தங்கள் நாட்டு 1,500 இராணுவத்தினரை வெளியேற்றுவதாக பிரான்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜர் முன்பு பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1960ஆம் ஆண்டு நைஜர் சுதந்திர நாடாக உருவானது. ஆனால், அங்கு பிரான்ஸ் மறைமுகமாக ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதன்படி அந்த நாட்டின் ஜனாதிபதி முகமது பாசும் பிரான்ஸுக்கு ஆதரவாக செயல்பட்டார். இதனால் அவரை ஆட்சியில் இருந்து அகற்றி கடந்த ஜூலை மாதம் அங்கு இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டது.

எனினும் அங்கு பிரான்ஸ் நாட்டின் இராணுவத்தினர் சுமார் 1,500 பேர் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். இந்தநிலையில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் நைஜரில் உள்ள இராணுவத்தினர் மற்றும் தூதரக அதிகாரிகளை அங்கிருந்து வெளியேற்றுவதாக அறிவித்துள்ளார். இதனை நைஜர் நாட்டின் இராணுவ ஆட்சிக்குழு வரவேற்றுள்ளது.

*கனடாவில் சீக்கியர் படுகொலை:*

# விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

## அமெரிக்கா வலியுறுத்து

வாஷிங்டன், செப். 27

கனடாவில் சீக்கிய செயல்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜார் கொலை குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இந்தியாவை தனிப்பட்ட ரீதியிலும் பகிரங்கமாகவும் கேட்டுக்கொண்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ளார். கனடாவின் குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

கனடா பிரதமர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் நாங்கள் எங்கள் கனடா சகாக்களுடன் இந்த விடயம் தொடர்பில் நெருங்கிய தொடர்பில் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் விசாரணைகள் தொடர்வதும் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் முக்கியமான விடயம் என அமெரிக்கா கருதுகின்றது கனடாவின் விசாரைணகளுக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என நாங்கள் வெளிப்படையாகவும் தனிப்பட்ட ரீதியிலும் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கொரோனாவை விட ஆபத்தான வைரஸ் பரவும் அபாயம் உள்ளது!

## சீனாவின் புகழ்பெற்ற விஞ்ஞானி

பீஜிங், செப். 27

சீனாவின் புகழ்பெற்ற நுண்ணுயிரியல் விஞ்ஞானி ஷி ஸெங்லி, "எதிர்காலத்தில் கொரோனாவை விட மிகக் கொடிய வைரஸ் பரவும் அபாயமிருப்பதாக எச்சரித்துள்ளார்.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் வைரஸ்கள் பற்றிய ஆய்வின் மூலம் புகழ்பெற்றவர் ஷி ஸெங்லி.

ஒட்டுமொத்த உலகமும் கொரோனாவைவிட அதிக அபாயம் நிறைந்த வைரஸை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

வுஹானில் உள்ள நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தின், உருவெடுக்கும் தொற்று நோய்கள் மையத்தின் இயக்குநராக இவர் உள்ளார். இவர் கொரோனா தொற்று குறித்து கடந்த 20 ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறார்.

இவரின் குழுவினர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில், 40 வகையான கொரோனா வைரஸ்கள் மனித குலத்தை தாக்கவுள்ளன. இதில் பாதிக்கும் மேற்பட்டவை மிகவும் அபாயமானவை என்று குறிப்பிட்டுள்ளனர்.

மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு போன்ற பயங்கர நிகழ்வுகள் தாக்கக்கூடும் என்று எச்சரித்துள்ள அவர், அதிகரிக்கும் வைரஸ்கள், மக்கள் தொகை, விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய் போன்றவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதேநேரம், இதுபோன்ற ஆய்வுகளுக்காக, வுஹான் ஆய்வுகூடம் மிக மோசமான வைரஸ்களைக் கொண்டு ஆய்வு நடத்துகிறது. அமெரிக்கா அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்த ஆய்வுகூடத்துக்கான நிதியை நிறுத்தி வைக்க வேண்டும் என்று அமெரிக்க பெடரல் அமைப்பு வலியுறுத்தி வருகின்றது. (ஐ)

# ரூ. 1,500 கடனை செலுத்தாததற்காக பெண் ஆடை களைந்து சித்திரவதை!

பாட்னா, செப். 27

வாங்கிய 1,500 ரூபாயை திருப்பிக் கொடுக்காததால் தலித் சமூகத்தை சேர்ந்தவரின் மனைவியின் ஆடையை களைந்து சித்திரவதை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொடூரம் இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் பாட்னா மாவட்டம் மோசிம் பூர் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

தலித் சமூகத்தை சேர்ந்த தொழிலாளி பிரமோத் என்பவரிடம் கடன் வாங்கியுள்ளார். அவரின், மனைவி கடந்த 23ஆம் திகதி இரவு குடிநீர் பிடிப்பதற்காக குடத்துடன் பொது குழாயடிக்கு சென்றார். அப்போது பிரமோத்தும் அவரின் கூட்டாளிகளும் தொழிலாளியின் மனைவியை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று கடன் மற்றும் வட்டி பணத்தை தருமாறு மிரட்டினர்.

அவர் பணம் இல்லை என்று கூறியதால் ஆத்திரமடைந்து அந்த பெண்ணின் ஆடைகளைக் களைந்து, அடித்து உதைத்து சித்ரவதை செய்தனர். பிரமோத்தின் மகன் அன்சூ குமார், பெண்ணின் முகத்தில் சிறுநீர் கழித்தார்.


உயிரைக் காப்பாற்ற அந்த பெண் ஆடையில்லாமலேயே வீட்டுக்கு தப்பியோடி வந்துவிட்டார். தனக்கு நேர்ந்த கொடுமையை கணவர், உறவினர்களிடம் அவர்கண்ணீர் மல்க கூறினார். இதுகுறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொலிஸ் அதிகாரி ஜிதேந்திர சிங் கங்குவார் கூறும்போது, "இந்த வழக்கில் 5 தனிப்படைகள் அமைத்து பிரமோத் குமார், அவரின் மகன் அன்சூ குமார் உட்பட 6 பேரை தேடி வருகிறோம். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

இதற்கிடையில், ரூ1,500 கடனை கொடுத்து விட்டதாகவும் அதன்பிறகும் கூடுதல் வட்டி கேட்டு மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

# கனடா - இந்தியா விவகாரம் இலங்கை இந்தியா பக்கமே!

## இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த



சீக்கிய செயல்பாட்டாளர் கனடாவில் சுட்டுக்கொல்லப் பட்டமையின் பின்னணியில்

**புதுடில்லி, செப். 27**

**இந்தியா - கனடா விவகாரத்தில் இலங்கை இந்தியாவுக்கு ஆதரவளிப்பதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.**

இந்திய அரசாங்கம் உள்ளது என்று கனடா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா வழங்கியுள்ள பதில் உறுதியானது - என்றும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம். பயங்கரவாதம் குறித்து சிறிதளவு கூட சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தக்கூடாது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தயாசிறியை எந்நேரமும் ஏற்பதற்கு நான் தயார்!

## மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, செப். 27


பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை எந்த நேரத்திலும் சுதந்திர கட்சி ஏற்கத் தயார். ஆனால், அவருக்கு பதவிகளை வழங்குவதில் நம்பிக்கை இல்லை - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உப அமைப்புப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

'தயாசிறி விரும்பினால் எந்த பிரச்னையும் இல்லை. அவர் எந்த நேரத்திலும் வரலாம்' என்று மைத்திரிபால சிறிசேன அங்கு கூறினார்.

கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகரவை நீக்கும் தீர்மானம் தொடர்பில், மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி விரிவாக விளக்கினார்.

அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாகும். ஓரிரு தேர்தல்கள் வரலாம் என்பதால், அதற்கு தயாராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (அ)




# பச்சை - வெள்ளை நிறத்தில் ஒளிரவுள்ள தாமரை கோபுரம்!

கொழும்பு, செப். 27

முஸ்லிம்களின் இறை தூதர் முஹமத் நபி (ஸல்) அவர்களின் பிறந்தநாளான, மீலாதுன் நபி தினத்தைக் கொண்டாடும் வகையில், கொழும்பு தாமரை கோபுரம் விசேட நிறத்தில் ஒளிர செய்யப்படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை மீலாதுன் நபி தினத்தில் பச்சை மற்றும் வெள்ளை நிறத்தில் தாமரைக் கோபுரம் ஒளிர செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 348 விசேட மருத்துவ நிபுணர்கள் 18 மாதங்களில் வெளியேறினர்!

## சுகாதார அமைச்சரின் குழு அறிக்கை

கொழும்பு, செப். 27

கடந்த 18 மாதங்களுக்குள் 348 விசேட மருத்துவ நிபுணர்கள் சேவையை விட்டு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் நியமித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 272 விசேட மருத்துவ நிபுணர்கள் சம்பளம் இல்லாமல் விடுமுறை பெற்று நாட்டை விட்டு சென்றுள்ளனர். மேலும் 76பேர் எந்த அறிவிப்பும் இல்லாமல் சேவைக்கு வராமல் விலகியுள்ளனர்.

அத்துடன், தரப்படுத்தப்பட்ட 850 மருத்துவ அதிகாரிகள் ஒரு வருட காலத்துக்குள் அதாவது 2022 ஜூன் 1ஆம் திகதியில் இருந்து 2023 மே 31 வரையான ஒரு வருட காலத்தில் சேவையை விட்டு சென்றுள்ளனர். அத்துடன், இவர்களில் 544பேர் சம்பளம் இல்லாமல் விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றுள்ளனர். இதேநேரம் 197பேர் அறிவிக்காமல் சேவையை விட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் 109பேர் தொழிலை விட்டு விலகிச் சென்றுள்ளனர் என்றும் குறித்த குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் நாட்டை விட்டு செல்வது தொடர்பாக தேடிப்பார்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைவாக சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்த உபகுழு இந்த தகவல்களை வெளிப்படுத்தி இருக்கிறது. (ஐ)

-சமூகவலைத்தளங்கள் மீது கட்டுப்பாடு-

# எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டில் எவ்வித உண்மைகளும் இல்லை

## மறுக்கின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, செப். 27

சமூக வலைதளங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. அனைத்து தரப்பினரின் ஆலோசனைகளை பெற்றே நிகழ்நிலை காப்பு சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐ. தே. க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு தற்போது பலன் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதி மேற்கொண்டு சென்ற வெளிநாடுகளில் அங்குள்ள தலைவர்கள் ஜனாதிபதி முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளதுடன் நாட்டுக்கு உதவி செய்யவும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

உலக அரசியலுடன் இணைந்து செல்லக்கூடிய ஒரு தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு யாரும் இலங்கையில் இல்லை. அதனால் அரசியல் அனுபவம் உலக நாடுகளுடன் பேச்சுகளை மேற்கொள்ள முடியுமான இலங்கையில் இருக்கும் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவாவார். அதனால் அவர் நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மேலும் நாட்டை அபிவருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் சர்வதேச உதவிகள் கிடைக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதனை தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் சில பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றன. குறிப்பாக சமூகவலைத்தளங்களை அடக்கி, அரசாங்கத்துக்கு எதிரான கருத்துகளை பகிர்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நிகழ்நிலை காப்பு சட்டமூலம் ஊடாக நடவடிக்கை எடுத்து வருவதாக பிரசாரம் செய்து வருகின்றனர். அவர்களின் கருத்துகளில் எந்த உண்மையும் இல்லை. மக்களை அரசாங்கத்துக்கு எதிராக திசை திருப்பவே இவ்வாறு செயல்படுகின்றனர்.

சமூக வலைதளங்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்துக்கு எந்த தேவையும் இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது. ஆனால், சமூகவலைத்தலங்கள் ஊடாக சமூக விரோத செயல்பாடுகள் இடம்பெறுவது, இனங்களுக்கிடையில் பிரச்னைகளை தூண்டும் விடயங்களை பகிர்வதை தடுப்பதற்கு முடியுமான ஒழுங்குவிதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் சமூகவலைத்தளங்களை அடக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை.

அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராகவும் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமையவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டமூலங்கள் தயாரிக்கப்பட முன்னர் இதுதொடர்பாக அனைத்து தரப்பினர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டிருக்கின்றன, அந்த ஆலோசனைகளுக்கு அமையவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன -என்றார். (ஐ)

# பிரபல வர்த்தகர் ஷாப்டரின் உடலை குடும்பத்தினரிடம் ஒப்படைக்க உத்தரவு

கொழும்பு, செப். 27

மர்மமான முறையில் உயிரிழந்த வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் உடலை அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க குற்றப் புலனாய்வு துறைக்கு (சிஐடி) உத்தரவிடப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை முடிவடைந்ததன் அடிப்படையில் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

மறைந்த வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் பூதவுடல், மரணம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய விசேட தடயவியல் நிபுணர் குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் மே மாதம் பொரளை பொது மயானத்தில் தோண்டி எடுக்கப்பட்டது.

மரணத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்த ஷாப்டரின் சடலத்தை தோண்டி எடுக்க வேண்டியது அவசியம் என குழு, கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரியவிடம் முன்னைய விசாரணையின்போது தெரிவித்திருந்த நிலையில், சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

52 வயதான தினேஷ் ஷாப்டர் 2022 டிசெம்பர் 15ஆம் திகதி பொரளை மயானத்தில் தனது காரின் சாரதி ஆசனத்தில் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மறுநாள் உயிரிழந்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு ஷாப்டரின் மரணம் தொடர்பாக பொரளை பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொட்டும்...

இடத்திலும், நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன் , யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06இற்கும் மேற்பட்ட ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

நினைவு சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும் , மழையையும் பொருட்படுத்தாது , நினைவிடத்தில் கூடி இருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீரா காரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாத நிலையில் 12 நாட்களில் அவரது உயிர் பிரிந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. (அ)

## மொட்டுக்...

கோரப்படுவதுடன், எவ்வாறு செயற் பட வேண்டும் என இதன்போது ஆலோசனையும் வழங்கப்பட்டுவருகின்றது என தெரியவருகின்றது.

இவ்வாறு நடைபெற்ற சந்திப்பொன்றின்போது, " மொட்டு கட்சிக்கு ஜனாதிபதி தரப்பில் கவனிப்பு எதுவும் இல்லை, அமைச்சுப் பதவிகூட வழங்குவதில் இழுத்தடிப்பு தொடர்கின்றது என உள்ளக் குமுறல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டு கட்சி ஆதரவு வழங்கவுள்ள விவகாரம் தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அவ்வேளையிலேயே மொட்டு கட்சி உறுப்பினர் ஒருவரே வேட்பாளராக களமிறக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தை பஸில் வழங்கியுள்ளார் என தெரியவருகின்றது. (அ)

## இலங்கையில்...

கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியாவில், கடந்த ஜூன் மாதம் காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ் ஜார் கொல்லப்பட்டதில் இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்புபட்டுள்ள தாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடே குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனையடுத்து, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜ தந்திர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், கனடாவின் குற்றச்சாட்டு தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்துரைத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கனடா எந்தவிதமான ஆதா ரங்களும் இன்றி இவ்வாறான குற்றச் சாட்டுக்களை முன்வைப்பதாக தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகள் சிலர் கனடாவில் பாதுகாப்பான புகலிடத்தை கண்டு பிடித்துள்ளனர்.

இந்தநிலையில், கனேடிய பிரதமர் எந்தவித ஆதாரமும் இன்றி சில மூர்க்கத்தனமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். இலங்கைக்கும் கனடா இதே விட யத்தையே செய்தது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பான விடயமாகும்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

இந்தநிலையில், கனடா பிரதமர் இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கைக்கு...

தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா மற்றும் உலக வங்கி அதிகாரிகளுடன் நியூயோர்க்கில் உள்ள உலக வங்கி தலைமையகத்தில் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது, உலக வங்கியின் தலைவர் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் ஆதரவளிப்பதாக உறுதியளித்திருந்தார். (அ)

## நாணய...

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழான இரண்டாவது தவணையை பெற்றுக் கொள்வது தொடர்பான இறுதி கலந்துரையாடலாக இந்த சந்திப்பு இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையை பெறுவது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## நவம்பர்...

மாதம் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதியும் அதன் பின்னர் குழுநிலை விவாதம் அல்லது மூன்றாம் வாசிப்பு நவம்பர் 22 முதல் டிசெம்பர் 13 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

## வெளியுறவு...

கூறிவருகின்றார். இவ்வாறு கருத்துகளை வெளியிடுவதைவிட தவறை ஏற்றுக் கொண்டு அவர் மன்னிப்பு கோர வேண் டும்.

தனக்கு வேலைப்பழு அதிகம் என்றால் அமைச்சுப் பதவியை துறந்து அதனை பொருத்தமான ஒருவரிடம் கையளிக்கவேண்டும்.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான வழக்குகளில் ஆஜரானதால்தான் அலிசப்ரிக்கு தேசிய பட்டியல் எம்.பி. பதவி வழங்கப்பட்டது - என்றார். (அ)

## அமெ...

நேரிட்ட மிலேச்சன சித்திரவதைகள் தொடர்பாக பிரதான கவனத்தை செலுத்தி அவர்கள் இராஜாங்க செயலாளருக்கு கடிதத்தை அனுப்பி இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இந்த கடிதத்தை அனுப்பி உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான நடக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை முறையாக பொறுப்புக்கூற வேண்டும் குடியரசு கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்களான சமர் லீ மற்றும் பில் ஜோன்சன் ஆகியோர் தலைமையிலான காங்கிரஸ் உறுப்பினர்கள் அமெரிக்கவிடம் கோரியுள்ளனர்.

இலங்கையில் இன்னும் குற்றவாளிகள் அனுபவிக்கும் தண்டனையின்மை அந்நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுத்துள்ளது.

மேலும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக கோட்பாடுகளைப் பாதுகாப்பதில் உறுதிபூண்டுள்ள நாடு என்ற வகையில், அமெரிக்கா இந்த நடவடிக்கைகளை எதிர்த்து அவற்றை நிறுத்துவதற்கு பாடுபடவேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# கொங்கிறீட் ஆணிகள் உட்கொள்ள வைத்தனர்!

### பணிப்பெண்ணாகச் சென்றவர் குற்றச்சாட்டு!!

கொழும்பு, செப். 27

சவுதி அரேபியவிற்கு பணிப்பெண்ணாக சென்ற மாத்தளை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் "தான் பணிபுரிந்த வீட்டில் தன்னை 5 கொங்கிறீட் ஆணிகளை விழுங்க வைத்தனர்" என வத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாத்தளை அல்கடுவ பிரதேசத்தில் உள்ள தோட்டப்பகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளைக்குத் தாயான இருபத்தொரு வயதான தியாகச்செல்வி என்பவரே இவ்வாறு முறைப்பாடு அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜூன் மாதம் கொழும்பில் உள்ள தனியார் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக வீட்டுப் பணிப்பெண் வேலைக்காக சவுதி சென்றேன். அங்கு நான் பணிபுரிந்து வந்த வீட்டில் உள்ளவர்கள் எனக்கு உணவு வழங்காமல் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சித்திரவதை செய்து வந்தனர்.

இதனையடுத்து எனது நிலை குறித்து வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் தெரிவித்திருந்தேன். இதனால் கோபமடைந்த வீட்டு உரிமையாளரும் அவரின் தாயாரும் ஒன்றாக சேர்ந்து என்னை கொடூரமான முறையில் தாக்கியதோடு, பின்னர் 5 கொங்கிறீட் ஆணிகளை விழுங்கும்படியும் கட்டாயப்படுத்தினர்.

பின்னர், துணிகளை உலர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் வெள்ளை இரும்பினால் செய்யப்பட்ட ஸ்பிரிங் ஒன்றையும் விழுங்க வைத்தனர். இதன்போது குறித்த இரும்புத் துண்டு தனது தொண்டையில் சிக்கியது.

சில நாட்களுக்குப் பின்னர் எனது வயிறு மற்றும் வாயில் இருந்து இரத்தம் வரத் தொடங்கியதையடுத்து குடியிருப்பாளர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதன்போது என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள் எனது வயிற்றில் ஐந்து இரும்பு ஆணிகள் இருப்பதைக் கண்டு, எனக்கு சிகிச்சை அளிக்க முன்வந்தனர். அதன் பின்னர் சவூதி வைத்திய சாலையொன்றில் உள்ள வைத்தியர் ஒருவரின் தலையீட்டின் மூலம் தூதரகத்தின் ஊடாக நான் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டேன்.

பின்னர் கண்டி வைத்தியசாலையில் பரிசோதனை செய்து பார்த்தபோது எனது வயிற்றில் மேலும் இரண்டு ஆணிகள் இருப்பது எக்ஸ்ரே மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து இரண்டு நாட்களுக்கு முன்பு மருத்துவர்களால் ஒரு ஆணி அகற்றப்பட்டதோடு மற்றொரு இரும்பு ஆணி எனது வயிற்றின் பின்புறத்தில் தற்போதும் உள்ளது-என்றார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு அறிவித்தபோதும் அவர்கள் பதிலளிக்கவில்லை எனத் தெரிவித்த பெண்ணின் தாயார், கணவனை பிரிந்து குழந்தையுடன் தனியாக வாழும் தனது மகள், குழந்தையின் எதிர்காலத்திற்காகவே வெளிநாடு சென்றார் எனக் கவலை தெரிவித்துள்ளார். (அ)

## சுகாதார...

செய்யவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், ரமேஷ் பத்திரன சுகாதார அமைச்சர் பதவியை ஏற்க மறுத்துவிட்டதாகவும், அதன் பிரகாரம் பொதுஜன பெரமுனவின் எம்.பிகள் பாராளுமன்றத்தில் சுயேச்சை உறுப்பினர் அனுர யாப்பா பிரியதர்ஷனவை சுகாதார அமைச்சராக நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது, ரமேஷ் பத்திரனவை சுகாதார அமைச்சர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தார். ஆனால் ரமேஷ் பத்திரன ஒரு மருத்துவர் என்ற காரணத்தினால் அந்த முன்மொழிவை நிராகரித்திருந்தார்.

இந்த நிலையில், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத மூன்றாம் தரப்பினரின் ஊடாக அனுர பிரியதர்ஷன யாப்பாவிடம் இந்த யோசனையை முன்மொழியப்பட்டுள்ளது.

அனுர பிரியதர்ஷன யாப்பா பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டபோதும் பின்னர் சுயேச்சை பாராளுமன்ற உறுப் பினராகவும் செயலபட்டு வருகிறார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவால் உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசியல் கூட்டணியின் தலைமைத்துவத்தை அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கவும் முன்மொழியப்பட்டது.

என்றாலும், குறித்த கூட்டணியை கட்டியெழுப்புப் செயல்பாடு தோல்வியடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள பின்புலத்திலேயே அனுர பிரிய தர்ஷன யாப்பாவுக்கு சுகாதார அமைச்சர் பதவியை வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அநுர பிரிதர்ஷன யாப்பாவுக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்குத் தெரியவந்துள்ளதுடன், அதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் பிரதான பங்காளி கட்சியான பொதுஜன பெரமுன, அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு பெயர் பட்டியலொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

அதற்கிணங்க, அநுர பிரியதர்ஷனவுக்கு அமைச்சர் பதவி வழங்கினால், அக்கட்சியின் தலைவர்கள், அநுர பிரிய தர்ஷன யாப்பாவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர். (அ)

## கடனை...

விடயங்களை செய்ததாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள்.

நாட்டில் போராட் ங்கள் முன்னெடுக்கப்பட்டு அரியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதும் இதனால்தான் என்று கூறினார்கள்.

என்னுடைய கருத்தின்படி இந்த நாட்டிலுள்ள அதிகாரியோ அமைச்சரோ அல்லது இராஜாங்க அமைச்சரோ அரசியலமைப்பை மீறுவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உரிய அதிகாரிகளின் கடமை மற்றும் உரிமை.

கடனை மீள செலுத்த முடியாது என்று கூறியதில் அரசியலமைப்பு மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அதற்கான நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பகிரங்கமாகக் கூறுகின்றேன்.

நிதி அமைச்சு என்ற ரீதியிலும் மத்திய வங்கி என்ற ரீதியிலும் அதற்கான முழு ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கின்றோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ். பல்கலையில் நேற்று தியாகி திலீபனின் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், செப். 27

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை நினைவேந்தலில் கலந்துகொண்டவர்களுக்கு மாணவர்களால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (அ)

# நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை குழப்ப முயற்சி!

யாழ்ப்பாணம், செப். 27

நல்லூரில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டபோது அதனை குழப்பும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் மக்கள் அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த வேளை வீதியில் போக்குவரத்தைச் சரி செய்தவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தினர் எனவும், மக்கள் நெரிசல் காணப்பட்ட இடத்தில் வேகமாக வாகனத்தைச் செலுத்தி அச்சத்தை ஏற்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இளைஞனை கடத்தி கொள்ளை மூன்று பேர் மானிப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், செப். 27

இளைஞனை மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்று தாக்கி, அவரிடமிருந்து பெறுமதியான கைபேசி மற்றும் மணிக்கூடு என்பவற்றை கொள்ளையிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சனிக்கிழமை வீதியில் சென்ற இளைஞனை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கடத்தி, ஆள்நடமாட்டம் அற்ற பகுதிக்கு கொண்டு சென்று தாக்கி அவரின் கைபேசி மற்றும் மணிக்கூடு என்பவற்றை பறித்து சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மூவரை கைது செய்தனர். அத்துடன், அவர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பயணிப்பது சவாலானதொரு விடயம்!

## கூறுகிறார் செஹான் சேமசிங்க

கொழும்பு, செப். 27

**பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பயணிப்பது சவாலான விடயம் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.**

**கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சரியான முறைமைகளை பின்பற்றாமையினால் இன்று பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சரியான முறைமைகளில் ஏற்படும் மறுசீரமைப்புகளை பின்பற்ற நேரிடும்.

இதன் பின்னர் பயணிப்பது மிகவும் சவாலுக்குரிய விடயம். இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எந்த ளவுக்கு வலுவானதாக மாற்றுகிறோம் என்பதும் சவாலுக்குரிய விடயம்.

அவற்றை நடைமுறைப்படுத்தும் போது மேலும் நாட்டு மக்களுக்கு சில அசௌகரியங்களை சந்திக்க நேரிடும். அரசாங்கம் என்ற ரீதியில் அதிலிருந்து நாங்கள் பின்வாங்குவதில்லை.



ஆனால் அந்த சரியான முறைமைகளை மறுசீரமைத்து நிலைபெற செய்வதுதானது நீண்ட காலத்திற்கு நாட்டு மக்கள் சிறந்த ஒரு வாழ்க்கை முறையை நடத்துவதற்கும் அன்றாட வாழ்வை எவ்வித தடைகளும் இன்றி முன்னெடுப்பதற்கு பிரதான காரணியாக அமையும் - என்றார். (அ)

# மன்னாரில் திலீபனுக்கு அஞ்சலி



மன்னார், செப். 27

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று மன்னாரில் உள்ள தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர்கள்,நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பரஞ்சோதி ,மன்னார் நகர சபையின் முன்னாள் உப தவிசாளர் ஜான்சன், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். (அ)

# கிளிநொச்சியிலும் திலீபனுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, செப். 27

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த நிகழ்வு நேற்று காலை 8.30 மணியளவில் முன்னாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது தீபச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவித்ததை தொடர்ந்து அடையாள உண்ணா விரதம் இடம்பெற்றது. குறித்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)



# இலங்கையின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு மாற்றம் அவசியம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, செப். 27

இலங்கையின் பிரச்னைகளை செயல்திறனுடன் தீர்ப்பதற்கு தற்போதுள்ள முறைமைகளில் மாற்றம் செய்யப்படவேண்டியது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதிமன்றங்களுக்குள் நீண்டகாலமாக வழக்கு விசாரணைகள் நீடிப்பது நெருக்கடியாக அமைந்துள்ளதாகவும், பிரச்னைகளை தீர்ப்பதற்கான மாற்று வழிகளை கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 2023 வர்த்தக மத்தியஸ்தம் தொடர்பான மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்

தேசிய பிரச்னைகளை தீர்ப்பதற்கான மத்தியஸ்தானத்தினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டில் மாற்று பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான மத்தியஸ்தானம் ஒன்று நிறுவப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அதன் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார். இந்த ஆரம்பத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கையை அமுல்படுத்துவதற்கு பிரச்னைகளை தீர்ப்பதில் காணப்படும் சாதக நிலைமை முக்கிய பங்கு வகிப்பதாகவும், கொழும்பு துறைமுக நகரத்தை கொழும்பு நிதி வலயமாக மாற்றியமைப்பதற்கான சட்டமூலத்தை உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அந்த சட்டத்தின் ஊடாக முதலீட்டுச் சபையை, பிரச்சினைகளுக்கு செயல்திறனுடன் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய பொருளாதார ஆணைக்குழுவாக மாற்றியமைக்க தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் முக்கியத்துவம் மற்றும் மாற்று பிரச்சினைகளை தீர்பதற்கான மத்தியஸ்தானமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான அவசியத்தையும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் போட்டித்தன்மை மிக்க எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக இலங்கையின் எல்லைகளுக்கு அப்பால் சென்று செயற்கை நுண்ணறிவு மற்றும் புளொக்செயின், பசுமை வலுசக்தி உள்ளிட்ட வளர்ந்து வரும் துறையில் சிறப்பம்சங்களை உருவாக்க ஒன்றுபடுமாறு சட்ட வல்லுநர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## உலகக் கிண்ணத் தொடர் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, செப். 27

ஐ. சி. சியின் ஒருநாள் உலகக் கிண்ண போட்டிக்கான 15 வீரர்கள் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தசுன் சானக அணியின் தலைவராக செயல்படவுள்ளார். உப தலைவராக குசல் மெண்டிஸ் செயல்படுவார்.

வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன மற்றும் டில்ஷான் மதுசங்க ஆகியோர் உடல்தகுதியை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் மூவரும் அணியில் இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளது.

15 பேரடங்கிய இலங்கை கிரிக்கெட் குழாம் வருமாறு,

தசுன் சானக ( அணித் தலைவர்), குசல் மெண்டிஸ், பதும் நிஷங்க, குசல் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, சரித அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, துனித் வெல்லலாகே, கசுன் ராஜித, மதீஷ பத்திரண, லகிரு குமார, வனிந்து ஹசரங்க ( உடற்தகுதியில்லை ), மகேஷ் தீக்ஷன (உடற்தகுதியில்லை ), டில்ஷான் மதுசங்க (உடற்தகுதில்லை)

இதேவேளை, துஷான் ஹேமந்த மற்றும் சாமிக கருணாரத்தன ஆகியோர் மேலதிக வீரர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

## லேவர் கிண்ண ரென்னிஸ் உலக அணி கைப்பற்றியது



கனடாவில் நடைபெற்ற லேவர் கிண்ண ரென்னிஸ் போட்டியில் 6ஆவது எடிஷனில் உலக அணி - ஐரோப்பிய அணியை வீழ்த்தி, தொடர்ந்து 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

போட்டியின் கடைசி ஆட்டத்தில் உலக அணியைச் சேர்ந்த அமெரிக்காவின் பென் ஷெல்டன்ஃபிரான்சஸ் டியாஃபோ இணை 7-6 (7/4), 7-6 (7Times New Roman5) என்ற செற்களில் ஐரோப்பிய அணியை சேர்ந்த போலந்தின் ஹியூபர்ட் ஹர்காக்ஸ்ரேஷ்யாவின் அந்த்ரே ரூபலேவ் கூட்டணியை சாய்த்தது.

இதையடுத்து மொத்தமாக 13-2 என்ற கணக்கில் உலக அணி வென்றது. அந்த அணியின் வீரர்களான ரெய்லர் ஃப்ரிட்ஸ், ஃபிரான்சஸ் டியாஃபோ, ரொம்மி போல், பெலிக்ஸ் ஆகர், பென் ஷெல்டன், பிரான்சிஸ்கோ செருண்டோலோ ஆகியோருக்கு தலா ரூ. 9 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. (ஐ)

# ஆஸிக்கு எதிரான போட்டியில் ஷூப்மன் கில், தாகூருக்கு ஓய்வு

ராஜ்கோட், செப். 27

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இன்று நடக்கவுள்ள 3ஆவது ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் ஷூப்மன் கில், ஷர்துல் தாகூருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் வரும் ஒக்ரோபர் 5ஆம் நாள் தொடங்கவுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் வென்ற இந்தியா, 2/0 என ஏற்கனவே தொடரைக் கைப்பற்றியது.

மூன்றாவது, கடைசி ஒருநாள் போட்டி இன்று ராஜ்கோட்டில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய அணியில் தொடக்க வீரர் ஷூப்மன் கில், வேகப்பந்துவீச்சாளர் ஷர்துல் தாகூருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. சக வீரர்களுடன் ராஜ்கோட்டுக்கு செல்லாத இவர்கள், அசாமின் கவுகாத்தியில், வரும் 30ஆம் திகதி நடக்கவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ணப் பயிற்சி ஆட்டத்துக்கு முன்னர் அணியில் இணைவர்.

முதலிரண்டு போட்டியில் ஒரு சதம், ஒரு அரைச்சதம் விளாசிய ஷூப்மன், 178 ஓட்டம் குவித்துள்ளார். பந்துவீச்சில் ஏமாற்றிய ஷர்துல், இரண்டு போட்டியிலும் சேர்த்து 113 ஓட்டங்கள் (78, 35) வாரி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





### ஆசிய விளையாட்டுப் போட்டி:

# கிரிக்கெட்டில் இலங்கை மகளிர் வெள்ளிப் பதக்கம் வென்றது

ஹங்ஸோ, செப். 27

சீனாவின் ஹங்ஸோவில் நடைபெற்றுவரும் 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வெள்ளிப் பதக்கம் வென்றது. இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை வென்றெடுத்த முதலாவது பதக்கம் இதுவாகும்.

ஹங்ஸோ விளையாட்டரங்கில் திங்கட்கிழமை நடைபெற்ற மகளிர் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் இந்தியாவிடம் 9 ஓட்டங்களால் தோல்வி அடைந்ததால் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் சொந்தமானது.

இந்தியா நிர்ணயித்த 117 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.



அனுஷ்கா சஞ்சீவனி (1), விஷ்மி குணரட்ன (0), அணித் தலைவி சமரி அத்தபத்து (12) ஆகிய மூவரும் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் ஆட்டம் இழக்க, இலங்கை 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

எனினும், ஹாசினி பெரேரா (25), நிலக்ஷி டி சில்வா ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தினர்.

தொடர்ந்து நிலக்ஷி டி சில்வா (23), ஓஷாதி ரணசிங்க (19) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 28 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவுக்கு நெருக்கடியைக் கொடுத்தனர். ஆனால், இருவரும் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்ததால் இலங்கை மீண்டும் அழுத்தத்தை எதிர்கொண்டது.

அதன் பின்னர் ஓட்டங்களைப் பெறுவதில் சிரமத்தை எதிர்கொண்ட இலங்கை, வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

பந்துவீச்சில் டிட்டாஸ் சாந்து 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ராஜேஷ்வரி கெய்க்வாட் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்தியா 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்ட இந்தியா சார்பில் ஸ்மிருதி மந்தனா (46), ஜெமிமா ரொட்றிகஸ் (42) ஆகிய இருவரே திறமையை வெளிப்படுத்தி சுமாரான ஓட்டங்களைப் பெற்றனர்.

அவர்கள் இருவரும் 2ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 73 ஓட்டங்களே ஆட்டத்தில் திருப்புமுனையாக அமைந்தது.

ஏனைய வீராங்கனைகள் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளையே பெற்றனர். இந்தியாவின் பிரபல மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகளான ஷபாலி வர்மா (9), ரிச்சா கோஷ் (9), அணித் தலைவி ஹமன்ப்ரீத் கோர் (2), ஆமன்ஜோத் கோர் (1) ஆகியோர் இலங்கை பந்துவீச்சில் துவண்டு போயினர்.

பந்துவீச்சில் உதேஷிகா ப்ரபோதனி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் இனோக்கா ரணவீர 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சுகந்திகா குமாரி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# 3000 சிக்ஸர்கள் அடித்து இந்திய அணி சாதனை!

புதுடில்லி, செப். 27

ஒருநாள் போட்டிகளில் 3 ஆயிரம் சிக்ஸர்கள் அடித்த முதல் அணி என்ற வரலாற்று சாதனையை இந்திய அணி படைத்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் இந்தூரில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்திய அணி ஒருநாள் தொடரை கைப்பற்றியது. இந்தப் போட்டியில் இந்திய அணி,ஒருநாள் போட்டிகளில் 3,000 சிக்ஸர்கள் அடித்த முதல் அணி என்ற வரலாற்று சிறப்புமிக்க சாதனையைப் படைத்தது. ஆஸிக்கு எதிரான போட்டியில் மட்டும் இந்திய அணி 18 சிக்ஸர்களை விளாசியிருந்தது.

ஒருநாள் போட்டிகளில் 3000 சிக்ஸர்கள் அடித்த முதல் அணி என்ற சாதனையை இந்திய அணி படைத்துள்ள நிலையில், அந்தப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் உள்ள அணிகளைக் காணலாம்.

அணிகள் அடித்த சிக்ஸர் விவரம்

இந்தியா - 3007+ சிக்ஸர்கள்
மே.இ.தீவுகள் - 2953+ சிக்ஸர்கள்
பாகிஸ்தான் - 2566+ சிக்ஸர்கள்
அவுஸ்திரேலியா - 2476+ சிக்ஸர்கள்
நியூசிலாந்து - 2387+ சிக்ஸர்கள்
இங்கிலாந்து - 2032+ சிக்ஸர்கள்
தென்னாபிரிக்கா - 1947+ சிக்ஸர்கள்
இலங்கை - 1779+ சிக்ஸர்கள்
சிம்பாப்வே - 1303+ சிக்ஸர்கள்
பங்களாதேஷ் - 959+ சிக்ஸர்கள்
ஆப்கானிஸ்தான் - 671+ சிக்ஸர்கள்
அயர்லாந்து - 611+ சிக்ஸர்கள் (ஐ)



# இந்தியா - கனடா: ஜஸ்டின் ட்ரூடோ உலக அரங்கில் தனித்து விடப்படுகிறாரா? அமெரிக்கா ஆதரிக்காதது ஏன்?

ஹோலி ஹோண்ரிச்

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த வாரம் நியூயார்க்கில் செய்தியாளர்களின் கேள்விகளை எதிர்கொண்ட போது, அவரது வழக்கமான மற்றும் நம்பிக்கை மிகுந்த புன்னகை மங்கியிருந்தது.

செய்தியாளர் சந்திப்பில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்தும் இந்தியா தொடர்பானவை. இதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. ஏனென்றால் ஒரு வாரத்திற்கு முன்பு அவர் இந்திய அரசு மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

'நமது மண்ணில் கனடா குடிமகன் கொல்லப்பட்டதற்குப் பின்னணியில் இந்திய அரசின் ஏஜெண்டுகள் இருக்கலாம் என்று நம் ஏஜென்சிகள் கண்டறிந்துள்ளன. இங்கு நடந்த கொலைக்குப் பின்னால் ஒரு வெளிநாட்டு அரசு இருக்கலாம் என்று நமது ஏஜென்சிகள் கூறுகின்றன. இது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும் இது நமது இறையாண்மையை மீறும் செயலாகும்," என்று திங்களன்று ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் கூறினார்,

ஆனால் கனடாவின் குற்றச்சாட்டுகளை இந்தியா முழுமையாக நிராகரித்துள்ளதுடன் இந்த கொலைக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறியுள்ளது.

இந்த ஆண்டு ஜூன் 18 அன்று, சீக்கிய தலைவரும் காலிஸ்தான் ஆதரவாளருமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (45 வயது) கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள ஒரு குருத்வாராவிற்கு வெளியே சுட்டுக் கொல்லபப்ட்ருந்தார்.

## ஜஸ்டின் ட்ரூடோவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

நிதானமாகவும் அளவாகவும் பேசிய ட்ரூடோ, 'நாங்கள் யாரையும் தூண்டிவிடவோ, பிரச்சனைகளை உருவாக்கவோ விரும்பவில்லை. விதிகளை அடிப்படையாகக் கொண்ட உலக முறைமைக்காக நாங்கள் குரல் எழுப்புகிறோம்" என்றார்.

இந்த நேரத்தில் சில செய்தியாளர்கள் ட்ரூடோவிடம் 'உங்களது இந்த முயற்சிகளில் கனடாவின் கூட்டாளிகள் எங்கே?" என்று கேட்டனர். "இதுவரையில் நீங்கள் தனியாக இருப்பது போலவே தெரிகிறது" என்றார் ஒரு செய்தியாளர்.

இந்தியாவுடனான மோதலைப் பொருத்தவரை ஜஸ்டின் ட்ரூடோ, உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் மக்கள்தொகை அடிப்படையில் கனடாவை விட 35 மடங்கு பெரிய ஒரு நாட்டுடன் தனித்து நின்று போராடி வருவது போலத் தெரிகிறது.

ட்ரூடோ இந்தியா மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்ததிலிருந்து, 'ஃபைவ் ஐஸ்" உளவுத்துறை கூட்டணியில் உள்ள அவரது கூட்டாளிகள் சிலர் மட்டுமே பகிரங்கமாக முன்னால் வந்து பேசியுள்ளனர்.

இந்த விஷயம் தீவிரமானது மற்றும் கவலையளிப்பது என்று அவர்கள் வர்ணித்துள்ள போதிலும் கனடாவுக்கு வெளிப்படையான ஆதரவை அவர்கள் அளிப்பதாகக் கூற முடியாது.

## "ஃபைவ் ஐஸ்" உறுப்பினர்கள் என்ன சொன்னார்கள்?

'ஃபைவ் ஐஸ்" என்பது அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே உருவாக்கப்பட்ட ஒரு கூட்டணியாகும். இதன் கீழ் உளவுத்துறை தகவல்கள் பகிரப்படுகின்றன.

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் க்ளெவர்லி, "கனடாவின் குற்றச்சாட்டுகளை எங்கள் அரசு மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறது. அரசின் விசாரணையை நாங்கள் ஆதரிக்கிறோம், உண்மை வெளிவர வேண்டும்" என்றார்.



ஆனால் தென்பகுதியில் உள்ள அண்டை நாடான அமெரிக்காவால் கனடா பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளது.

இந்த இரண்டு நாடுகளும் மிகவும் நல்ல நண்பர்கள். ஆனால் அமெரிக்கா இந்த பிரச்சனையில் எதிர்பார்த்த அளவிற்கு தனது அதிருப்தியை வெளிப்படுத்தவில்லை. இந்த விவகாரம் குறித்து நியூசிலாந்து இதுவரை எதுவும் கூறவில்லை.

## இந்தியாவின் முக்கியத்துவம் மற்றும் அமெரிக்காவின் நிலைப்பாடு

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஐநா சபையில் உரையாற்றிய போது அவர் இந்தியாவை விமர்சிக்கவில்லை. மாறாக இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை சுட்டிக் காட்டி, ஒரு புதிய பொருளாதார பாதையை காட்டுவதில் இந்தியாவின் பங்கை பாராட்டினார்.

இந்த விஷயத்தில் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே எந்த ஒரு "பிளவும்" இல்லை என்று பின்னர் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன் கூறினார். கனடாவுடன் அமெரிக்கா தொடர்ந்து தொடர்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் இந்த விவகாரத்தில் அமெரிக்கா வெளியிட்ட பொது அறிக்கைகளில் அது 'தீவிர கவலை" அளிக்கிறது என்று மட்டுமே பேசியுள்ளது. மேற்கத்திய நாடுகளுக்கு இந்தியாவின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதையும் அமெரிக்கா ஒப்புக் கொண்டது.

தற்போது இந்தியாவின் வளர்ந்து வரும் செயல் உத்தி முக்கியத்துவம் காரணமாக கனடாவின் நலன்கள் பலவீனமாக இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதுதான் கனடாவின் இப்போதைய பிரச்சனை என்று அவர்கள் கூறினர்.

"அமெரிக்கா, பிரிட்டன், மேற்குலக நாடுகள் மற்றும் இந்தோ-பசிபிக் பகுதியில் உள்ள கூட்டாளிகளும், சீனாவின் வளர்ந்து வரும் ஆதிக்கத்தை முறியடிக்க வகுத்துள்ள உத்தியில், இந்தியாவின் இடம் முக்கியமானது. இது ஒரு முக்கியமான விஷயம். தனது ஒரு கூட்டாளிக்காக அதை அவர்களால் விட்டுக்கொடுக்க முடியாது," என்று கனடா இன்ஸ்டிடியூட்டின் ஆராய்ச்சியாளர் சேவியர் டெல்காடோ கூறுகிறார்.

ஃபைவ் ஐஸ் கூட்டாளிகளிடையே இந்த விவகாரம் தொடர்பான உளவுத்துறை தகவல்கள் பகிரப்பட்டதை, கனடா தொலைக்காட்சியான சிடிவி ந்யூஸுக்கு அளித்த பேட்டியில், கனடாவிற்கான அமெரிக்க தூதர் டேவிட் கோஹேன் உறுதிப்படுத்தினார்.

ஆனால் இந்தக் கூட்டணியின் அதே கூட்டாளிகள் தொடர்பான அறிக்கை குறித்துக் கேட்டபோது, "தூதர்களின் தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்து நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை" என்று கூறி கேள்விக்கு பதிலளிப்பதை அவர் தவிர்த்தார்.

இந்த கொலையை பகிரங்கமாக கண்டிக்குமாறு கனடா எல்லா நட்பு நாடுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## தற்போதைய உலக சூழலில் கனடாவின் நிலை

ஆனால் இந்த விஷயம் தொடர்பாக உலகளவில் காணப்படுகின்ற மௌனம், உலக அரங்கில் கனடாவின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவது போலத்தெரிகிறது. கனடா மேற்கத்திய நாடுகளின் நம்பகமான கூட்டாளி என்றாலும் கூட அது உலகில் ஒரு பெரிய சக்தி அல்ல.

"இது பலவீனத்தின் தருணம். நாம் பார்ப்பது ஒரு பவர் ப்ளே. கனடா அனைவரின் கண்மணியாக இருக்குமென்று சொல்லக்கூடிய நேரம் இதுவல்ல. இன்றைய காலகட்டத்தில், முடிவெடுப்பதற்குப் பின்னால் பலம், வலிமை மற்றும் பணம் உள்ளது, இவை கனடாவிடம் இல்லை," என்று கனடா இன்ஸ்டிடியூட் இயக்குனர் கிறிஸ்டோஃபர் சாண்ட்ஸ் குறிப்பிட்டார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபிக்கப்பட்டால், கனடா மண்ணில் வேறொரு நாடு அரசியல் படுகொலை செய்த விவகாரமாக அது ஆகிவிடும் என்பதால், இந்தியாவை பகிரங்கமாக குற்றம் சாட்டும் ஜஸ்டின் ட்ரூடோவின் முடிவு நியாயமானது என்று இந்தியாவுக்கு வெளியே சிலர் கருதுகின்றனர்.

எனினும் கனடாவுக்கு தற்போது ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமையை மாற்றுவதற்கு இந்த அறநெறி போதுமானதாக இருக்குமா என்று கூற முடியாது.

ட்ரூடோவைப் பொருத்தவரை இந்த புவிசார் அரசியல் யதார்த்தம் கண்முன்னே வந்தது. ஒருபுறம், குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு சில நாட்கள் அவர் தனித்து விடப்பட்டார். மறுபுறம், இந்தியாவுடனான கனடாவின் தூதாண்மை மோதல் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இந்தியாவின் உயர்மட்ட தூதரக அதிகாரியை கனடா வெளியேற்றியது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, கனடாவின் உயர்மட்ட அதிகாரி ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று இந்தியாவும் உத்தரவிட்டது.

கனடாவில் வசிக்கும் தனது குடிமக்களுக்கு இந்தியா பயண ஆலோசனையை வழங்கியது. கனடாவில் உள்ள இந்திய தூதரகம் விசா சேவைகளை நிறுத்தியது. "செயல்பாட்டு காரணங்களால், சேவைகள் தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ளன" என்று அது கூறியது.

## ட்ரூடோவிற்கு உள்நாட்டில் அதிகரித்து வரும் சிரமங்கள்

கனடாவின் இந்த நீண்ட கோடை காலத்தில் இந்த வாரம் ட்ரூடோவுக்கு மிகவும் கொந்தளிப்பாக இருந்தது.

பண வீக்கம் மற்றும் வட்டி விகிதங்கள் ஏற்கனவே கனடாவில் உள்ள மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. இதற்கிடையில் கனடாவில் நடந்த தேர்தலில் சீனாவின் தலையீடு இருப்பதாக கூறப்படும் செய்தி வெளிவந்தது. இது பற்றி ட்ரூடோவும் அவரது அமைச்சரவை சகாக்களும் ஏற்கனவே அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் அதை தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இதற்கிடையில், கனடாவின் மிகவும் மோசமான தொடர் கொலைகாரன் பால் பெர்னார்டோ, 'நடுத்தர பாதுகாப்பு" கொண்ட சிறைக்கு மாற்றப்பட்ட செய்தி வந்தது. இந்த விஷயத்தில் ட்ரூடோ மீண்டும் விமர்சகர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்.

செப்டம்பர் மாதத்திற்குள் ட்ரூடோவின் மதிப்பீடு மூன்று வருடங்களில் மிகக் குறைந்த அளவுக்கு சரிந்தது. 2015 தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரான ட்ரூடோவை மீண்டும் பிரதமர் பதவியில் பார்க்க விரும்பவில்லை என்று ஆய்வில் கலந்துகொண்ட 63 சதவிகித கனடா குடிமக்கள் தெரிவித்தனர்.

"அவரது எட்டு ஆண்டு கால ஆட்சியில், அவர் இவ்வளவு கீழ் மட்டத்தில் இருந்ததில்லை. அவர் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற முடியுமா, அவர் ராஜினாமா செய்ய வேண்டுமா என்று அவரிடம் நேரடியான கேள்விகள் கேட்கப்படுகின்றன," என்று ஆங்கஸ் ரீட் இன்ஸ்டிடியூட் என்ற ஆய்வுக் குழுவின் தலைவர் சாச்சி கர்ல் கூறினார்.

முன்னாள் பிரதமரின் மகனான ஜஸ்டின் ட்ரூடோ, பிஎம்ஓ அலுவலகத்தை அடைய கீழ் மட்டத்திலிருந்து தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். 2015ல் அபார பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்.

"கனடாவின் அரசியலில் முன்பு யாருக்குமே இருந்திராத அளவிற்கு அவரது பிரபலம் மிக அதிகம். தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு அவரது புகழ் மேலும் அதிகரித்தது," என்று குளோப் அண்ட் மெயில் செய்தித்தாளின் தலைமை அரசியல் நிருபர் கேம்ப்பெல் கிளார்க் கூறுகிறார்,

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் மனதில் போதும் என்ற உணர்வு வந்துவிட்டதாகத் தெரிகிறது. இப்போது ட்ரூடோவின் 'ஸ்டார் பவர்', குறைந்துவிட்டதாக குறிப்பாக சமீபத்திய மாதங்களில் அது மேலும் சரிந்துவிட்டதாக மக்கள் உணர்கிறார்கள்.

உலக அரங்கில் ஜஸ்டின் ட்ரூடோ தனிமைப்படுத்தப்பட்டதாகத் தோன்றினாலும், இந்தியா தொடர்பான இந்த சர்ச்சை உள்நாட்டில் அவருக்குப் பயனளிக்கும் என்று பலர் கருதுகின்றனர்.

"இந்த சர்ச்சையின் காரணமாக நாட்டிற்குள் எழுப்பப்படும் கேள்விகளிலிருந்து தப்பிப்பது அவருக்கு எளிதாக இருக்கும்." என்று காம்ப்பெல் கிளார்க் கூறுகிறார்.

ஆனால் கடந்த வார இறுதி ட்ரூடோவுக்கு அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. வார இறுதியில் அவர் யுக்ரேன் அதிபர் விலோதிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்தார். அவர் நடப்பு காலத்தின் மற்றொரு பெரிய பிரபலம்.

இருவரும் கனடா-யுக்ரேன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். வாரத்தின் கடைசி நாளை ட்ரூடோ தனது ஒரு நல்ல கூட்டாளியுடன் செலவிட்டார் என்றே சொல்லலாம்.

# உலக சுற்றுலா தினம்

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மானிட இனத்தின் அசைவும், இயக்கமும் இனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இடம் பெற்றது. தேவைகள் வரையறையற்றவை, வளர்ந்து செல்பவை. இத்தகைய தேவைகளினை பூர்த்தி செய்வதற்கு பயணங்கள் தேவைபடுகின்றது. அத்தகைய பயணங்களின் வடிவங்களும், முறைகளும் கால மாற்றம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் போன்றவற்றல் வேறுபாடுகின்றன. இத்தகைய நகர்வுகள், பயணங்கள், சமகாலத்தில் நாம் வியந்து நோக்குகின்ற "சுற்றுலா" என்கின்ற முக்கியத்துவம் வாயந்த பாரிய தொழில்துறையின் உருவாக்கத்திற்கு அடிப்படையானது. சுற்றுலா என்கின்ற பதம் பதினோராம் நூற்றாண்டுகளிலே அதிகம் புழக்கத்திலிருந்த டொனர்ஸ் (**Tornus**) என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியது. "டூர்" (**Tour**) என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்து யாதெனில் ஓர் வட்டத்தின் சுழற்சியினைக் குறிப்பதாக அமைந்துள்ளது. நவீன சுற்றுலாவின் வரலாறு 17ம் நூற்றாண்டில் இருந்து நோக்கப்படுகினறது. இக்காலப்பகுதியில் மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பியாவில் வாழ்ந்த இளம் பிரபுக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக பிரான்ஸ், கிரீஸ், இத்தாலி மற்றும் ஜேர்மன் போன்ற நாடுகளுக்கு கலை மற்றும் கலாசாரம், பாரம்பரியம், மரபுரிமை போன்றவற்றினை அறிதலின் நோக்கமாகக் கொண்டு பயணங்களினை மேற்கொண்டனர்.

அடிப்படையில் நீண்ட பயணங்களின் தோற்றமானது அத்மா ஈடேதத்துக்கான சமய அனுஷ்டானங்களிலும், வருமான ஈட்டலுக்கன வணிகத்தில் ஈடுபடும் நோக்கிலும் அமைந்தன. இவ்வாறு மானிடஇனம் சமுக பொருளதர ஈடேற்றத்துக்கு என பயணங்களினை மேற்கொண்டனர் என்பதற்கு வரலாற்று ரீதியாக சான்றுகள் பல உள்ளன. அதிலும் தமிழர்கள் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே கடல்வழிப் பயணங்களில் ஈடுபட்டனர் என்பதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. "பண்டைக்கால வர்த்தகத்தின் சுருக்கமான வரலாறு" எனும் நூலில் பண்டைக்கால வணிகத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிடும் போது கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய இராச்சியமானது பாலஸ்தீனம், நுபியா போன்ற நாடுகளுடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததும், கி.பி 608ம் ஆண்டளவில் எகிப்தியரும் பினிசியர்களும் கடல் வழியாக கூட்டாக ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுத்தப்படுகின்றது. சிறப்பாக சங்ககால இலக்கியங்களிலும், சங்க காலத்துக்கு முற்பட்டதக கருதப்படும் தொல்காப்பியத்திலும் இவை குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக "முந்நீர் வழக்கம்" என்று கூறப்படுவதிலிருந்து தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னே தமிழர்கள் கடல் கடந்து வாணிப நோக்கத்திற்காக பயணங்கள் மேற்கொண்டார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு வாணிபத்திற்கான பயணமும் ஆத்ம ஈடேற்றத்திற்கான பயணமும் தொடர்ந்து கொண்டிருந்தன. ஆனால் 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாய் ஓர் செல்வந்த வகுப்பு ஐரோப்பிய நாடுகளில் உருவாகியது. அவர்கள் தமது ஓய்வு நேரத்தினை மகிழ்வுக்காய் பயன்படுத்திக் கொள்வதற்கு "பொழுதுபோக்கு சுற்றுலா" எனும் எண்ணக்கருவினை நடைமுறைக்கு அறிமுகப்படுத்தினர். இவ்வாறாய் இவ் அறிமுகத்தின் பயனாக



உலகில் ஏனைய நாடுகளும் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டன. பணம் படைத்த வர்க்கத்தினர் தமது ஓய்வு நேரத்தினை பயணங்களில் செலவு செய்தனர். இதன் விளைவாகவோ என்னவோ 19ம் நூற்றாண்டில் தோமஸ் குக் மற்றும் புதல்வர் என்ற முதல் பயண முகவர் நிறுவனம் தோற்றம் பெற்றது. இதன் பேறாய் சுற்றுலாத்துறையானது பல்பரிமாணம் கொண்டு உலகமெங்கும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இராண்டம் உலக மகா யுத்தத்தின் பின் மத்திய தரைக் கடற்கரை சுற்றுலா பயணிகளுக்கிடையே பிரபல்யம் அடைந்தது. இக்காலத்தில் சமூக நலன் மீது ஏற்பட்ட அக்கறையும், ஊழியச் சட்டங்களில் ஏற்பட்ட மறுதல்களும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் பாரிய நேர்கணிய பங்களிப்பினை ஏற்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெகுசன சுற்றுலா பிரபல்யமடைந்தது. காலப்போக்கில் மானிட இனத்தின் வளர்ச்சியும், நாகரீக மாறுதல்களும் சுற்றுலாத்துறைக்கான கேள்வி வடிவங்களில் மாறுதல்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக மரபுரிமைச் சுற்றுலா, பாலியல் சுற்றுலா, விவசாயச் சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, சமய சுற்றுலா-புனித யாத்திரைகள், கல்விச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, இளைஞர் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா என சுற்றுலாவின் வடிவங்கள் மானிடத்தின் தேவைக்கேற்ப உருவகம் பெற்றது.

### இலங்கையில் சுற்றுலாத்துறை

புத்த பகவான் பொதித்த போதனைகள், தத்துவங்கள் இலங்கையின் அநாதி குடிகளிடையே பரவுவதற்கு முன்னர், வெளிநாட்டவர்கள் இலங்கையுடன் பயணத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பதற்கு தபசு (**Thapassu**) மற்றும் பல்லுகா (**Balluka**) என்ற இரு சகோதரர்கள் இலங்கைக்கு வணிக நோக்குடன் பயணம் மேற்கொண்டதனை வரலாற்று ஆதாரங்கள் சான்றாக்குகின்றன. எனினும் ஓர் கட்டமைக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சியானது காலனித்துவ ஆட்சிக் காலத்தில்லேயே உருவாக்கப்பட்டது.

குறிப்பாக, 450 வருட காலனித்துவத்தின் பாரம்பரியம்மும், இலங்கையின் எழில் கொஞ்சும் இயற்கை அழகும், காலனித்துவத்திற்கு முன்னரான கட்டடக் கலைகளின் மகிமையும், சிறப்பும் மேலும் வசீகரமான காலநிலையும் நடுத்தர வருமானம் உழைக்கும் ஐரோப்பியர்களை இலங்கை நோக்கி வரவழைத்தது. உண்



மையில் இன்னும் அழுத்தமாகக் கூறுவதாயின் ஐரோப்பியர்களினால் இலங்கை குளிர்கால ஓய்வுக்கான ஓர் இடமாக நோக்கப்பட்டது. 1937ம் ஆண்டு பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் "சுற்றுலாப் பணியகம்" இலங்கையில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் இதன் செயற்பாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தினால் சொபையிழந்து, செயலிழந்ததாகக் போயிற்று.

1960ஆம் ஆண்டு வரையில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, தெங்கு, இறப்பர் போன்றவற்றில்தான் தங்கியிருந்தது. ஆனால் 1960ம் ஆண்டிற்கு பின்னர் உலக சந்தையில் இவற்றுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக அந்நிய செலாவணியை உழைப்பதற்கான ஓர் மாற்று வழியாக சுற்றுலாத்துறையானது நோக்கப்பட்டது. அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனியார் துறையினரும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி மீது அதீத அக்கறை செலுத்தினர். குறைந்த முதலீட்டில் கூடிய வருமானத்தினை உழைக்கக் கூடிய துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டமையே காரணமாக அமைந்தது ஆனாலும் இத்துறையானது இன்றுவரை இங்கு தொடர்ச்சியான சவால்களினை எதிர்நோக்குகிறது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியானது நீண்ட காலமாக நடைபெற்ற தமிழர்களின் தாயக மீட்பு போராட்டத்தில் பாதிப்புக்குட்பட்டது. ஆனாலும் 2000ம் ஆண்டுகளின் முற்பகுதியில் கிழக்கில் அறுகம்பை, பாசிக்குடா பளிங்கு கடற்கரை போன்றவை சுற்றுலாப் பயணிகளால் கொண்டாடப்படும் இடங்களாக வளர்ச்சி பெற்றது. 2009ம் ஆண்டு, என்றும் "தீராத் தாகத்துடன்"மௌனித்த யுத்தத்தின் பின்னரும் வடக்கில் சுற்றுலா வளர்ச்சியானது

**பேராசிரியர் சி. சிவேசன்**
(நிகழ்ச்சித் தலைவர் - சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகதமைத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

2014ம் ஆண்டுவரை மிகவும் மந்தகதியிலேயே காணப்பட்டது. ஆனால் கடல்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று கடலை ஓய விடுவதில்லை என்பது போல் முதலீட்டாளர்களும், அரச இயந்திரமும் வடக்கில் சுற்றுலா அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணஓட்டத்தில் அன்றும், இன்றும் பயணித்தவாறாக உள்ளன. இவற்றுக்கு அப்பால் புலம்பெயர் தேசத்தில் வாழும் புலம்பெயர் உறவுகள், புலம்பெயர் முதலீட்டாளர்கள் என்கின்ற போர்வையில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் குறித்து நீண்ட வாதங்கள், பிரதிவாதங்கள், கலந்துரையாடல்கள் மேற்கொண்ட பொழுதும், விளைவு என்னவோ சுற்றுலா அபிவிருத்தி என்பது வடக்கில் ஓர் கானல்நீரோய்! உள்ளது. ஆரோக்கியமான பொதுமைப்படுத்திய அபிவிருத்தி மிக அரிதாகவே உள்ளது. சுற்றுலா என்பது 13ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசினாலும், மாகாண நிர்வாகத்தாலும் நிர்வகிக்கப்படுகின்ற துறையாக இருப்பதனால், மாகாண நிர்வாகமும் மத்திய நிர்வாகமும் இசைந்து இணைந்து செயல்படுவது சற்று கடினமாக உள்ளது. இவற்றுக்கு எல்லம் மகுடம் சூடுவது போல் தன்னார்வ நிறுவனங்களும் தங்கள் பங்கிற்கு வடக்கில் சுற்றுலா அபிவிருத்திக்கான ஐந்து ஆண்டு திட்டங்கள் தீட்டுவதுடனும், கொள்கை வகுப்பதுடனும் தங்களுடைய பங்குகளினை முடித்து கொள்ளுகின்றனர். இத்தகைய நிறுவனங்களின் நிதியீட்டத்தில் தயாரிக்கப்பட்ட திட்டங்களும், கொள்கை வண்ண அட்டைகளுடன் உயஉ அதிகாரிகளின் அலுமாரிகளிளை அழகுபாடுத்துகின்றன.

சுற்றுலா அபிவிருத்தி என்பது வடக்கில் காணப்படுகின்ற மக்களுடைய பண்பாட்டுஇ ஒழுக்க விழுமியங்களுக்கு இசைந்தவையாகவே இருக்க வேண்டும். அவ்வாறு அமைகின்ற போதுதான் சுற்றுலாத் துறையானது மக்களுடன் இசைந்த நிலைபேண் தன்மையைக் கொண்டிருக்கும் வளஉச்சி பெறும்.

### உலக சுற்றுலா தினம்

1980ம் ஆண்டு புரட்டாதி 27ல் இருந்து உலகெங்கும் உலக சுற்றுலா தினமானது பல்வேறுபட்ட கருப்பொருள்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1970ம் ஆண்டு புரட்டாதி 27ம் திகதி உலக சுற்றுலா நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகள் கழித்து சுற்றுலாத்தினக் கொண்டாட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. 2023ம் ஆண்டு உலக சுற்றுலாதினமானது "சுற்றுலாவும் பசுமை முதலீடும்" எனும் கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.